விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 21 வெள்ளிக்கிழமை (06.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

## கோவிட் தொற்றாளர்களால் நிரம்பி வழியும் வைத்தியசாலைகள்

### நாடெங்கும் வைரஸ் அபாயம்



(19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனாவால் ஒரே நாளில் 94 பேர் பலி

### அதிக மரணங்கள் இடம்பெற்ற நாளாக பதிவாகியது

*(கொழும்பு)*

கொரோனாத் தொற்றுக்குள்ளான 94 பேர் இலங்கையில் ஒரே நாளில் உயிரிழந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியது.

அரசாங்க தகவல் திணைக்களம் குறித்த தகவலை நேற்று இரவு வெளியிட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா +2,669

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 2,669 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந் 19

## கொரோனாவால் யாழில் மேலும் மூவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் மூவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஏழாலையைச் சேர்ந்த 67 19

### நாடு முழுவதும் 'டெல்டா' தீவிரம்

# நாட்டு மக்களுக்கு அபாய எச்சரிக்கை

### ஒவ்வொருவரும் தங்களை பாதுகாக்குமாறு சுகாதார துறையினர் அறிவிப்பு

*(கொழும்பு)* நாடு முழுவதும் திரிபடைந்த டெல்டா திரிபு வைரஸ் மிகவும் வேகமாக பரவி வருகின்றது. சமூக மட்டத்தில் டெல்டா பரவி வருவதனால் நாட்டு மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொதுமகனும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதார துறையினர் அறிவித்துள்ளனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

### கட்டுக்கடங்காமல் பரவிய வைரஸ்

## நாட்டை முடக்குவது குறித்து இன்று முடிவு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் நிலை காரணமாக வார இறுதி நாட்களில் நாட்டை முடக்குவது 19

### யாழ்.போதனா வைத்தியசாலை

## தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றது

### ஒட்சிசனுக்கும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை கொரோனா விடுதி தொற்றாளர் 19

## தொற்றுத் தீவிரம் ஒப்புக்கொண்டது ராஜபக்ஷ அரசு

### ஒட்சிசன் சிலிண்டரை இறக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் கோவிட்-19 தொற்று நோய் தீவிரமாகி சுகாதார 19

## கொரோனா தீவிரமாக மாறியுள்ளது பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்

### வடக்கு மக்களுக்கு சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா அபாயம் மிக தீவிரமானதாக மாறியிருக்கும் நிலையில் பொதுமக்கள் மிக பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு வேண்டுவதாக மாகாண சுகா 19

### அரச ஊழியர்களை

## இரு குழுக்களாக பிரித்து கடமைக்கு அழைக்க முடிவு

### கர்ப்பவதிகள் வீட்டிலிருந்து பணியாற்றலாம்

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தல் இன்னமும் தொடர்ந்துவரும் சூழலில் அரச சேவையிலுள்ள கர்ப்பவதிகள் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு சந்தர்ப் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மந்திகை பொதுச் சந்தையில் எழுமாற்றுப் பரிசோதனை

## இரு வியாபாரிகளுக்கு கொரோனா மரக்கறிச் சந்தை மூடப்பட்டது

(கரணவாய்)

மந்திகை பொதுச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பி. சி. ஆர் பரிசோதனையில் சந்தை வியாபாரிகள் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து மரக்கறிச் சந்தை மூடப்பட்டுள்ளது.

மரக்கறிச் சந்தை வியாபாரிகளிற்கு எழுமாற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்முடிவு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் வெளியானது. இதில் சந்தை வியாபாரிகள் இருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன்காரணமாக மரக்கறிச் சந்தை மூடப்பட்டுள்ளது. (ம-60)

# மட்டக்களப்பில் ஆலயத் திருவிழாவில் பங்கேற்ற 100 பேருக்கு கொரோனா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு -களுவங்கேணி மாரியம்மன் கோயில் திருவிழாவில் கலந்துகொண்ட கோயில் தலைவர், செயலாளர், குருக்கள் உட்பட 100 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த கிராம சேவகர் பிரிவான வந்தாறுமூலை கிழக்கு முடக்கி தனிமைப்படுத்துவதற்கு தேசிய கொரோனாச் செயலணிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக செங்கலடி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் சிவசேகரன் சிவகாநந்தன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், "செங்கலடி பிரதேச சுகாதார அதிகாரி பிரிவிலுள்ள குறித்த ஆலயத்தின் உற்சவத்தை நடத்துவது தொடர்பாக சுகாதார துறையிடம் அனுமதியைக் கோரியபோது 15 பேருடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்சவத்தை நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

எனினும் குறித்த அனுமதியை மீறி இறுதிநாள் உற்சவத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்க ஆலய நிர்வாகம் அனுமதியளித்ததையடுத்து அங்கு பெருந்திரளான மக்கள் உற்சவத்தில் பங்குகொண்டுள்ளனர்.

இதனையடுத்து குறித்த ஆலய நிர்வாகத்தை எச்சரித்ததுடன், ஆலயத்துக்கு சென்ற வந்தாறுமூலை கிழக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு கடந்த 3 தினங்களாக தொடர்ந்து அன்டிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே அவர்களுக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# கரவெட்டி சுகாதார அதிகாரி பிரிவில்

## 13 பேருக்கு தொற்று

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள ஆலய விழா ஒன்றில் கலந்துகொண்டிருந்த ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவருடன் தொடர்புபட்டவர்கள் தனி மைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது.

இதில் நேற்று வியாழக்கிழமை வெளியான முடிவில் 13 பேரு க்கு தொற்று ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-60)


**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (7565)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com


# ஏழாலையில் பாடசாலை ஆசிரியருக்கு கொரோனா

## 11 ஆம் வகுப்பு மாணவர்கள் 30 பேர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

கடந்த 2 ஆம் திகதியில் இருந்து பாடசாலைக்கு வந்து வரவை உறுதிப்படுத்துமாறு கல்வி அமைச்சினால் அனுப்பி வைக் கப்பட்டிருந்த சுற்றுநிருபத்துக்கு ஏற்ப பாடசாலைக்குச் சென்ற ஆசிரியர் ஒருவருக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியருடன் நெருங்கிப்பழகிய இன்னுமொரு ஆசிரியர் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவரால் கற்பிக்கப்பட்ட தரம் 11 வகுப்பு மாணவர்கள் 30 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம)


# மரண அறிவித்தல்



## திரு. வைரமுத்து நடராசா

( ஓய்வுநிலை ஆசிரியர் )

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மற்றும் சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வைரமுத்து நடராசா (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (05.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து ஆசாரி (நயினாதீவு 5ஆம் வட்டாரம்) - சூடாமணி (காரைநகர்) தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ஆசாரி (நயினாதீவு) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் வாசுகி, மகேஸ்வரன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவச்செல்வன் (உரிமையாளர் - சுவர்ணா ஹாட்வெயார்), கல்யாணி (ஆசிரியை - யா/ சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கன், ஹபிசாத், தயானி, சதுர்ஷிகா, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2021) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இல. 09, முருகேசர் வீதி, நல்லூர் எனும் முகவரியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2468)

இல. 09,முருகேசர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்


# யாழில் 97 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 9 மாதக் குழந்தை உட்பட 97 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில் 9 மாத ஆண் குழந்தை ஒன்று உட்பட யாழ். மாவட்டத்தில் 48 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


48தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் 31 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 10 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் (3 மாதக் குழந்தை ஒன்றும் உள்ளடக்கம்), சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் ஒருவர், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேர், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேர், மயிலிட்டி தனிமைப்படுத்தல் நிலையத்தில் 3 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.(ம)

## கிளிநொச்சி விளாவோடையில்

# இராணுவப் பொருட்களுடன் மனித எலும்பு எச்சங்கள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன், மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளர் எச்சங்கள் அவதானிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த எச்சங்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி பார்வையிட்ட பின்னர் எச்சங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100,316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் உச்சம் தொட்ட கொரோனா தாழ்வாரங்களில் தங்கும் நோயாளர்கள்!

## சமாளிக்க முடியவில்லை என்கிறார் ராகம வைத்தியசாலைப் பணிப்பாளர்

(கொழும்பு)

**ராகமை வைத்தியசாலை செயல் இழக்கும் நிலையை எட்டியுள்ளதாகவும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளமையால், வைத்தியசாலைகள் பலவற்றில், நடைபாதைகளில் நோயாளர்கள் பாய்களைப் போட்டு, படுத்து உறங்குவதாகவும் வைத்தியசாலை பணிப்பாளர் லியனகே ரணசிங்க தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நெருக்கடி காரணமாக நாங்கள் நோயாளிகளை மருத்துவமனையின் தாழ்வாரங்களில் தங்க வைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம். அச்சம் தரும் வகையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் எங்களால் சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இது, பேராபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வைத்தியசாலைகள் பலவற்றில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றாளர்களை அனுமதிக்கும் விடுதிகள் மட்டுமன்றி, அவசர சிகிச்சைப் பிரிவு விடுதி கட்டில்களும் கொரோனா தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன என்றும், அவசர நிலைமை பிரகடனப்படுத்தியிருக்கும்வைத்தியசாலைகளின் நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

பதுளை வைத்தியசாலையிலும் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள சகல அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் ஆகக்கூடுதலான கொள்ளளவுக்கு அண்மித்துள்ளது.

ஆகையால், கொழும்புக்கு வெளியே கொரோனா நிலையங்களாக இருக்கும் மத்திய நிலையங்களின் புகுமுகக் கூடத்தில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றது. (நி-5)

## சமூக வலைத்தளங்களை முடக்க உத்தரவிட்ட அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் பேஸ்புக் உட்பட சமூக வலைத் தளங்களை தடை செய்ய வேண்டும் என அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பேஸ்புக்உட்படசமூகவலைத்தளங்களை கட்டுப்படுத்துவதற்கு எவ்வித சட்டமும் இல்லாமையினால் அதனை தடை செய்வதற்கு அல்லது கட்டுப் படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

"தற்போது நாட்டில் என்ன நடக்கிறது என்பதற்கு சமூக ஊடகங்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

இந்த சூழ்நிலையில் சமூக வலைத்தளங்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்த சட்டங்களை கொண்டு வர வேண்டும்.

சீனாவில் சமூக ஊடகங்கள் இல்லை. அங்கு சமூக ஊடகங்கள் தடை செய் யப்பட்டுள்ளது" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

## டிஜிற்றல் தடுப்பூசி சான்றிதழ் பெறுவது எப்படி?

(கொழும்பு)

டிஜிற்றல் தடுப்பூசி சான்றிதழ்களை பெற விரும்புவோர்

❖ உங்கள் தடுப்பூசி அட்டையின் இருபுறம்

❖ தே.அ. இலக்கம் / கடவுச்சீட்டின் இருபுறம்

❖ தொடர்பு கொள்ளும் இலக்கம் என்பவற்றை epid unit cmc@gmail.com என்ற மின்னஞ்சல் முக்வரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப் பட்டு ள்ளது.

சான்றிதழ் தயாரானவுடன் அது பெறுநருக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

இதற்கிடையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு கோரிக்கையின் பேரில் தடுப்பூசிசான்றிதழ் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 1-15 வரை வசிப்பவர்களுக்கு டிஜிற்றல் தடுப்பூசி சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

தடுப்பூசிஅட்டை, கடவுச்சீட்டு மற்றும் தேவையான பிற ஆவணங்களை தனிநபர் சமர்ப்பித்தவுடன் சான்றிதழை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினூடாக வழங்கப்படும்என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும், விசேட வைத்திய நிபுணருமான ஹேமந்த ஹேரத் முன்னதாக கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பயங்கரவாதத் தடைச்சட்டம்

### நீதிக்கு முரணானது- பேரா. சர்வேஸ்வரன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையே இறுதித் தீர்வாக இருக்கவேண்டும். என்றாலும் இன்றைய நிலையில் தென்னிலங்கை மக்கள் அதற்கு தயாரான நிலையில் இல்லை. அதனால் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும். அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாமலேயே இதனை மேற்கொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் தீர்மானங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

யுத்தத்தின்போது மனித உரிமைச் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம் மிக மோசமான முறையில் மீறப்பட்டிருக்கின்றன. இதுதொடர்பில் சுந்திரமான விசாரணை மேற்கொள்ள சுதந்திரமான பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். அப்பொறிமுறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையவேண்டும்.

யுத்தத்தின்போதும் யுத்தத்துக்கு பின்னரும் தமிழ் அரசியல் கைதிகள் பலர் மிக நீண்ட காலமாக சிறைகளில் இருந்து வருகின்றனர். அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். அதேபோன்று பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு அவசியமில்லாத சட்டமாகும். ஏனெனில், அதில் இருக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நாட்டில் இருக்கும் நீதி முறைமைக்கு முரணாகும். அதனால் பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமலாக்கப்பட்டு இலங்கையில் ஏற்கனவே இருக்கின்ற தண்டனைச்சட்டக் கோவை, குற்றவியல் நடவடிக்கை கோவை மற்றும் சான்று கட்டளைச் சட்டம். அவைகளைக்கொண்டு ஒரு சட்டமைப்புக்கு கீழ் எல்லா குற்றங்களையும் கொண்டு வரவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## உலகில் 22 ஆவது இடத்தில் இலங்கை- இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் தினமும் கொரோனாவால் ஏற்படும் மரணங்களின் அடிப்படையில் இலங்கை உலகில் 22 ஆவது இடத்திற்கு வந்துள்ளது.

அத்துடன் ஆசிய பிராந்தியத்தில் இலங்கை நேற்று முன்தினம் 12 ஆவது இடத்தில் இருந்தது.

அத்துடன் நேற்று முன்தினம் மாத்திரம் இலங்கையில் கொரோனாவால் 82 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வேல்ட் மீற்றர் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியை துவம்சம் செய்து வெண்கலம் வென்ற இந்திய ஆண்கள் ஹொக்கி அணி

வெண்கல பதக்கத்திற்கான போட்டியில் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய ஆண்கள் ஹொக்கி அணி ஜேர்மனியை வீழ்த்தி பதக்கம் வென்றது.

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான ஹொக்கிபோட்டியில் வெண்கலப் பதக்கத்திற்கான போட்டி நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் இந்திய அணி ஜேர்மனியை எதிர்கொண்டது.

ஆட்டம் தொடங்கிய 2 ஆவது நிமிடத்திலேயே ஜேர்மனி வீரர் டிமுர் ஒருஸ் கோல் அடித்தார். இதனால் ஜேர்மனி 1-0 என முன்னிலை பெற்றது. அதன் பின் முதல் கால் பகுதிநேர ஆட்ட முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

2 ஆவது கால் பகுதி ஆட்டத்தில் ஜேர்மனிக்கு இந்திய அணி பதிலடி கொடுத்தது. இதனால் ஸ்கோர் 1-1 என முன்னிலை பெற்றது.

ஜேர்மனி வீரர் ஃபர்க் 25 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். அதற்கு பதிலடியாக ஹர்திக் சிங் மற்றும் ஹர்மன்ப்ரீத் சிங் முறையே 27 மற்றும் 29 ஆவது நிமிடங்களில் கோல் அடிக்க 2 ஆவது கால் பகுதி ஆட்டம் முடிவில் ஸ்கோர் 3-3 என சமநிலை பெற்றது.

3 ஆவது கால் பகுதி ஆட்டத்தில் இந்திய வீரர்களின் ஆட்டத்தால் கால் பகுதி ஆட்டம் தொடங்கிய முதல் நிமிடத்திலேயே, அதாவது ஆட்டத்தின் 31 ஆவது நிமிடத்தில் ருபீந்தர் பால் சிங் கோல் அடித்தார். அதோடு அல்லாமல் 34 ஆவது நிமிடத்தில் சிம்ரஞ்ஜீத் சிங் கோல் அடித்தார். இதனால் 3 ஆவது கால் பகுதி ஆட்டத்தில் இந்தியா 5-3 என முன்னிலை பெற்றிருந்தது. 4 ஆவது மற்றும் கடைசி கால் பகுதி இந்தியாவின் ஸ்கோர் 5-4 என ஆனது.

ஜேர்மனி வீரர்கள் கோல் அடிக்க முயற்சி செய்ய, இந்திய வீரர்கள் தடுப்பதில் ஆர்வம் காட்டினர். 10 ஆவது நிமிடத்தில் இந்திய அணிக்கு சுப்பர் வாய்ப்பு கிடைத்ததும் இந்திய வீரர் ஹர்மன்ப்ரீத் சிங் கோல் அடிக்க தவறினார்.

கடைசி ஒன்றரை நிமிட ஆட்டத்தில் இந்திய வீரர்கள் ஜேர்மனியை கோல் அடிக்க விடாமல் சிறப்பாக தடுத்தனர்.



7 விநாடிகள் இருக்கும் போது ஜேர்மனிக்கு பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. அதையும் இந்திய வீரர்கள் முறியடிக்க 5-4 என இந்தியா வெற்றி பெற்று வெண்கலப் பதக்கம் வென்றது. இதன்மூலம் 41 வருடத்திற்கு பிறகு ஒலிம்பிக்கில் இந்திய ஆடவர் அணி வெண்கலப் பதக்கத்தை ருசித்துள்ளது. (6)




# டோக்கியோ ஒலிம்பிக்

- 32 தங்கங்களுடன் சீனா முதலிடம்
- அமெரிக்கா இரண்டாமிடம்
- ஜப்பான் மூன்றாமிடம்

2020 டோக்கியோ ஒலிம்பிக் தொடரின், பதக்கப் பட்டியலில் 32 தங்கத்துடன் சீனா தொடர்ந்தும் முன்னிலை வகித்து வருகின்றது.

இதன்படி 32 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 69 பதக்கங்களை சீனா வென்று முதலிடத்தில் உள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா, 25 தங்கம், 29 வெள்ளி 21 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 75 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

20 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 39 பதக்கங்களை பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இதனை அடுத்து நான்காவது இடத்தில் உள்ள அவுஸ்ரேலியா 14 தங்கம், 4 வெள்ளி, 16 வெண்கலம் அடங்கலாக 34 பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து ரஷ்யா 5 ஆவது இடத்திலும் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் 6 முதல் 10 இடங்களை கைப்பற்றியுள்ளன. (4-6)

# இரண்டாவது இருபது-20 போட்டியிலும் ஆஸியை பந்தாடிய பங்களாதேஷ் அணி

அவுஸ்ரேலியா அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 2-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி முன்னிலை பெற்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த அவுஸ்ரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 121 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் மிட்செல் மார்ஷ் 45, ஹென்ரிக்ஸ் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், முஷ்டபிசுர் ரஹ்மான் 3, சொரிபுல் இஸ்லாம் 2, மெயிடி ஹசன் மற்றும் சகிப் அல்ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 122 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 18.4 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அபீப் ஹொசைன் ஆட்டமிழக்காது 37, சகிப் அல் ஹசன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக், ஜோஸ் ஹசில்வுட், அஸ்டன் அகர், அடம் ஸெம்பா மற்றும் ஹென்ரிவ்டை ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக அபீப் ஹொசைன் தெரிவு செய்யப்பட்டார். (6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மீண்டும் டில்ஷான்!

## மகிழ்ச்சியில் ரசிகர்கள்



பாகிஸ்தானில் நடை பெறும் காஷ்மீர் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் டில்ஷான் பங்கேற்று விளையாடவுள்ளார்.

பாகிஸ்தானின் இருபது-20 தொடராக இருக்கும் காஷ்மீர் பிரிமியர் லீக் இன்று ஆரம்பம்.

இந்த தொடரில் மொத்த மாக ஆறு அணிகள்பங்கேற்கின்றன.

இந்த கிரிக்கெட் தொடரில் பல பிரபலமான வீரர்களும், முக்கிய ஜாம்பவான்களும் பங்கேற்று விளையாடுகின்றனர்.

அந்த வகையில் இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் டில்ஷான் இத் தொடரில் விளையாடவுள்ளார்.

டில்ஷான் மீண்டும் கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ளது ரசிகர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளது.(4-6)



இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் உப பொருளாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள வவுனியா உதைபந்தாட்ட சங்கத்தலைவர் நாகராஜனை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியாவிலுள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம் :- சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயினால் அதிகமானவர்கள் இறக்கும் அபாய நிலை !

## எச்சரிக்கிறார் மருத்துவர் ஹேமந்த

(கொழும்பு)

**நாட்டில் தற்போது டெங்கு நோயினால் அதிக மானவர்கள் இறக்கும் அபாயம் காணப்படுவ தாக பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**



2 நாட்களுக்கு மேல் காய்ச்சல் நிலை தொடர்ந்தும் காணப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை டெங்கு நோயானது கொரோனாவைப் போன்று ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவதனால் தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ள முடியாது என்றும் டெங்கானது கொரானாத் தொற்றை விடவும் விரைவாக பரவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் கொரோனாவால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றினால் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் 10 வயதிற்கு உட்பட்ட 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் 10-18 வயதிற்கு உட்பட்ட 26 ஆயிரத்து 143 குழந்தைகள் கொரோனானவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸால் 18 வயதிற்குட்பட்ட 14 குழந்தைகள் இறந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் தொடர்கின்றன.

இதன்மூலம் மற்றுமொரு கொரோனா அலையைத் தவிர்க்க முடியும் என்று அதிகாரிகள் நம்புவதாக வன்னியாராச்சி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (நி-5)

# விலை அதிகரிப்புக்காக பதுக்கப்படும் நெல் அரசுடைமையாக்கப்படும்



(கொழும்பு)

உத்தரவாத விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நெல்லின் விலை, அரிசியின் விலை மற்றும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் நடை முறைப்படுத்தும் செயற்றிட்டங்களை தெளிவுபடுத்துவதற்காக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை, நெல் ஆலை உரிமையாளர்கள் ஆகியோருக்குப் புறம்பாக நெல்லை சேமித்து வைக்கும் மூன்றாம் தரப்புக்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக தேவையான சட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

விலை அதிகரிப்பை கருத்திற்கொண்டு பதுக்கி வைக்கப்படும் நெல்லை அரசுடைமையாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கான சட்டமும் தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள், விவசாயிகள் ஆகிய தரப்புக்களின் நலன்கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டினார். உத்தரவாத விலையை விட கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்வோருக்கு எதிராக விதிக்கப்படும் தண்டப்பணம் 25 ஆயிரம் ரூபாய் தொடக்கம் ஒரு இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# ஈவினையில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு

(குப்பிழான்)

30 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஈவினை அ.த.க.பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, குப்பிழான் தெற்கு, குப்பிழான் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள முடியும் என மேற்படி பகுதிகளுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

மேலும் இதுவரை கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் தவறாது வருகை தந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (7-8-6-18)


**மணமகன் தேவை**

1989. NRC, ரோகினி. Manager. யாழ்ப்பாணம். பதிவு:6329. பதிவுக்கான 15% கழிவு 12 August 2021 வியாழக்கிழமையுடன் முடிவடை கிறது. பதிவு செய்ய www. EQ Marriage Service. Com/create-profile இற்கு செல்லுங்கள். www. EQ marriage Service.com, Ensured Quality Lanka Colombo-04, tel :0766649401 (1449)

**மணமகள் தேவை**

1979. இந்து. உத்தராடம். Engineer, UK (சொந்த இடம் சாவகச்சேரி) பதிவு:6340. பதிவுக்கான 15% கழிவு 12 August 2021 வியாழக்கிழமையுடன் முடிவடை கிறது. பதிவு செய்ய www. EQ Marriage Service. Com/create-profile இற்கு செல்லுங்கள். www. EQ marriageService.com, Ensured Quality Lanka Colombo-04, tel :0766649401 (1450)

**வாடகைக்கு**

யாழ். வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடிக் கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகங்களுக்கும் ஏற்றது.

(7562) தொடர்புக்கு

**077 828 1956**

**C.C.T.V. CAMERA பொருத்துவதற்கான கூறுவிலை கோரல்**

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் முகவராக செயற்பட்டு வரும் நெல்லியடி எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு C.C.T.V CAMERA பொருத்துவதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. இடத்தினை நேரில் பார்வையிட்டு பொருத்தமான விபரங்களை பெற்று கூறுவிலைகளை தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 16.08.2021

தொலைபேசி இலக்கம் :- 0212263263 (C-2466)

**தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்**


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1965 ❖ 01 ❖ 30

நோயின் பிடியில் 2020 ❖ 08 ❖ 16



**அமரர். திருமதி. அருட்பராசக்தி கஜேந்திரன்**

பல் சிகிச்சைப் பிரிவு யாழ். பரியோவான் கல்லூரி- வைத்திய உதவியாளர்

பல் சிகிச்சைப் பிரிவு ஆதார வைத்தியசாலை- பருத்தித்துறை. பரிசாரகர்

மேல்தர பரிசாரகர் தரம்-I பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதம்மா உம் நினைவுகள்

"காந்திமனை"
... வீதி,
...கால் மேற்கு.

பிரிவால் துயருறும்
பொன். கஜேந்திரன் (கணவர்)
தனுவந்தி (மகள்), கஜானன் (மகன்)

(7561)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவெல்லாம் நிறைந்த போராட்டங்கள் அரசின் மீது நம்பிக்கையற்ற நிலையை தோற்றுவித்துள்ளது-மாவை.சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)

**இலங்கை ஆசிரியர் சங்கமும் தொடர்புடைய ஏனைய தொழிற்சங்கங்களும் ஆசிரிய சமூகத்தின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அத்துடன் கொத்தலாவெல பல்கலைக்கழகம், "கொத்தலாவெல (பாதுகாப்பு) பல்கலைக்கழகம்" எனும் பெயர் மாற்றத்துடன் ஒரு சட்டமூலத்தை பாராளு மன்றத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிப்பதை நிறுத்த போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.**


அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதன் மூலம் பல்கலை. மாணவ சமூகத்தையும் இராணுவமயமாக்க அரசு முயற்சிக்கின்றதா? என்கிற கேள்வி எழுகின்றது.

கடந்த இருபத்தைந்து நாட்களாக நடைபெறும் போராட்டங்களையும் இக்கோரிக்கைகளையும் ஆதரித்து பல்கலை. மாணவர் சமூகமும் பொது அமைப்புக்களும் அரசியல் அமைப்புக்களும் போராட்டங்களை நடத்துவதை அரசாங்கம் ஒரு தீர்வுக்கு கொண்டு வராமல் அமைச்சர்களும் அமைச்சரவையும் கூட தொடர்ந்தும் பொறுப்பற்ற வகையில் இழுத்தடிப்பதை நாம் கண்டிக்கிறோம். இத்தகைய பிரச்சனைகளுக்குப் பொருத்தமான ஒரு தீர்வை தீர்மானிக்க அரசு தவறுவதால் கல்வித் துறையும் சீரழிந்து விடப் போகின்றது.

மேலும் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வரும் நெருக்கடி நிலையில் ஆசிரியர் சமூகமும் பொது அமைப்புக்களும் பல்கலை. மாணவர்களும் தெருவெல்லாம் நிறைந்து போராட்டங்களை நடத்தி வருவது அரசின் மீதும் எதிர்காலத்தின் மீதும் நம்பிக்கையற்ற ஒரு நெருக்கடி நிலையையே தோற்றுவித்துள்ளது.

"ஆசிரிய சமூகத்தின் சம்பளப் பிரச்சினைக்கு அரசு உடன் தீர்வு காண வேண்டும் என்பதுடன் கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலப் பிரேரணையையும் கைவிட வேண்டும்" இதனை நாமும் வற்புறுத்தி நிற்கின்றோம் எனக் கூறிய மாவை.சேனாதிராசா போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களையும் உடன் விடுதலை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் ஆசிரிய சமூகம், மாணவ சமூகம் மட்டுமல்ல அரசியல் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு. இன்றைய அரசை, ஆசிரிய சமூகத்தினதும் பல்கலை. மாணவர் சமூகத்தினதும் கோரிக்கைகளை நிறைவேற்ற வற்புறுத்த வேண்டும் எனவும் அத்துடன் பொருத்தமான ஜனநாயக நடவடிக்கைகளை எடுக்க




நாமும் வற்புறுத்துகிறோம் எனவும் தெரிவித்தார்.

(7-8)

## மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு மைதானம் அமைத்துத் தாருங்கள்

### பாடசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை



(சாவகச்சேரி)

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி - தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட இருக்கும் வேளையில் பாடசாலைக்கான மைதானத் தேவையைப் பூர்த்தி செய்து தருமாறு பாடசாலை சமூகம் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரின் பிரதிநிதிகள் விஜயம் மேற்கொண்ட போதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி நெடுங்காலமாக உரிய மைதானம் இன்றி இருந்து வருகிறது. இருப்பினும் எமது பாடசாலை வீர, வீராங்கனைகள் கடந்த வருடம் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளனர்.

தரமான மைதானம் கிடைக்கும் பட்சத்தில் மாணவர்களின் விளையாட்டுத் திறன் மேலும் அதிகரித்து தேசிய மட்டத்திலும் மிளிர முடியும்.

எனவே பாடசாலைக்கு சிறந்த மைதானம் கிடைக்கவும், அதனூடாக மாணவர்களின் விளையாட்டுத் திறனை அதிகரிக்கவும் வழிவகை செய்து தருமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

(7-8-6-30)

## யாழ்.போதனாவிற்கு ஜன சுவய கருத்திட்டம் மூலம் டயாலிசிஸ் இயந்திரம் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

"எதிர்க் கட்சியிலிருந்து ஓர் மூச்சு" திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடுபூராவும் நடைமுறைப்படுத்தும் "ஜன சுவய" கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூக நலத்திட்டத்தின் 22 ஆவது கட்டமாக இருபத்தி மூன்று இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் (டயாலிசிஸ் இயந்திரம்) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையாக நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

இதனை யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜாவிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கையளித்தார். (7-8-6-33)

## ஆசிரியர்களின் சம்பள உயர்வு கோரி மாபெரும் போராட்டம் முன்னெடுப்பு

(குப்பிழான்)

ஆசிரியர்களின் சம்பள உயர்வு கோரி எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பருத்தித்துறை பேருந்து நிலையத்திற்கு முன்பாக மாபெரும் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி போராட்டத்தில் வடமாகாணத்தைச் சேர்ந்த குறிப்பாக வடமராட்சி வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் தங்களின் ஆதரவுகளை முழுமையாக வழங்கிப் போராட்டம் வெற்றியடைய ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் வடமராட்சி வலயச் செயலாளர் சு.யசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(7-8-6-18)

## உரிமை கோரல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கமக்கார அமைப்பினால் சிவப்பு நிற 11/2 வயது மதிக்கத்தக்க கட்டாக்காலி மாடு பிடிக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் 077 412 0234 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கு 3 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளவும் என நல்லூர் கமநல சேவைகள் நிலையத் தலைவர் எம்.செல்வகுமார் தெரிவித்தார். (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏழை நாடுகள் தடுப்பூசி பெறும் வரை

# பூஸ்டர் தடுப்பூசி திட்டத்தை உலக நாடுகள் நிறுத்த வேண்டும்

## உலக சுகாதார அமைப்பு வேண்டுகோள்

**(ஜெனிவா)**

**கொரோனா மூன்றாம் அலை பரவும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை உலக நாடுகள் நிறுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.**

உலகம் முழுவதும் ஏற்கனவே கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில் தற்போது மூன்றாம் அலை பரவும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உலக நாடுகள் பலவற்றில் இரண்டாவது டோஸ் தடுப்பூசியைத் தொடர்ந்து பூஸ்டராக மூன்றாம் டோஸ் தடுப்பூசி செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு,

உலகம் முழுவதும் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கொரோனா பரவல் உள்ள நிலையில் அனைத்து நாடுகளிலும் மக்கள் தொகையில் 10 சதவீதத்தினராவது தடுப்பூசி பெற்றாலே பரவலைக் கட்டுப்படுத்த முடியும் நிலை உள்ளது.

ஆனால் பல நாடுகளில் மக்களுக்கு முதல் டோஸ் தடுப்பூசியே கிடைக்கவில்லை.

இந்நிலையில் அவர்களுக்கு தடுப்பூசி கிடைக்க நடவடிக்கை எடுக்காமல் மற்ற நாடுகள் மூன்றாவது டோஸ் பூஸ்டர் தடுப்பூசிகள் எடுப்பது கொரோனாவை உலக அளவில் கட்டுப்படுத்த உதவாது என்ற வகையில் கருத்துத் தெரிவித்துள்ளது. (நி-5)

World Health Organization


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 25 செவ் 11 சூரி 12 இல்<br>உயரம்:**177cm**<br>தகைமை/தொழில்: பொறியிலாளர் பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:உயர்கல்விகற்ற பெண்<br>தொ.இ: **B/2529** | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 32 செவ் 5சூரி3 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: **A/L**<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:**G/6565** |
| பிறப்பு:1982 இந்து நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: **33 ½** செவ் 7 சூரி 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:**BA,Officer Assistant (GOV)**<br>எதிர்பார்ப்பு:படித்த அழகான பெண்<br>தொ.இ: **B/2534** | பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா:**32 ¾** செவ்,சூரி10 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:**HNDM,GAQ.**<br>எதிர்பார்ப்பு:முட்டை தவிர அசைவம் உண்பதில்லை<br>தொ.இ:**G/6572** |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:**48 ¼** செவ் 1 சூரி 5 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: **B/2585** | பிறப்பு:1991இந்து நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:- செவ்,சூரி9 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:**BSMS** சித்த வைத்தியம்<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ:**G/6580** |
| பிறப்பு:1977 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:**20 ¼** செவ் 10சூரி11 இல்<br>தகைமை/தொழில்:சாரதி<br>எதிர்பார்ப்பு:சாதாரண வேலை செய்யும் பெண்,வேலை இல்லாவிடிலும் சம்மதம்<br>தொ.இ: **B/2606** | பிறப்பு: 1977இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா:**10 ¼**செவ் 10 சூரி2 இல்<br>உயரம்:**160cm**<br>தகைமை/தொழில்: தட்டச்சு<br>எதிர்பார்ப்பு:படித்த மணமகன்<br>தொ.இ:**G/6582** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]


## கைதான ஆசிரியர்களைப் பார்வையிட எதிர்க்கட்சி தலைவருக்கு அனுமதி மறுப்பு



(கொழும்பு)

ஆசிரியர்கள், அதிபர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு சம்பந்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு, தன்னிச்சையாக கைது செய்யப்பட்ட ஆசிரியர்களின் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக நேற்று சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு உள்நுழைவதற்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டது.

தன்னிச்சையாக கைது செய்யப்பட்ட ஆசிரியர்களை எதிர்க்கட்சித் தலைவருக்கே பார்க்க அனுமதி இல்லை எனும்போது, இது என்ன வகையான ஜனநாயகம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார். (நி-5)

## 600 வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 600 வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதன்படி அவர்கள் நேற்றுக் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரையில் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அனைத்து சுகாதாரப் பணியாளர்களையும் கட்டாயமாக சேவைக்கு சமுகமளிக்குமாறு அரசாங்கம் வெளியிட்ட சுற்றறிக்கைக்கு எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் குறித்த சுற்றறிக்கையை இரத்துச் செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜனாதிபதியின் செயலாளரால் எழுத்து மூலம் இணக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றுங்கள் அரச அதிபர் பகிரங்க கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தை அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்போடு கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போதிலும் ஒரு சில நாட்களில் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்துள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தொடர்பாக அதிகாரிகளுடன் மன்னார் மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதலை கடைப்பிடிப்பதில் தவறி உள்ளார்கள் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் மீண்டும் மிக இறுக்கமாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மக்கள் தமது கைகளினை கழுவி, சுகாதார நடைமுறையுடன் செயற்பட வேண்டும். பேருந்தில் ஆசனத்திற்கு ஏற்ப மாத்திரம் பயணிகளை ஏற்ற வேண்டும்.

மேலும் பேருந்தில் அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றும் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

அதிகமானவர்கள் முகக்கவசங்களை நாடிக்கு அணிபவர்களாகவே உள்ளனர். எனவே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, உரிய முறையில் முகக்கவசத்தை அணிவதற்கு மக்களை வலியுறுத்த வேண்டும்.

மேலும் மக்கள் கூடுகின்ற இடங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டும். மக்களின் தேவையற்ற நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில், கொண்டாட்டம், ஆலய திருவிழாக்கள் போன்றவற்றில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடுவதையும் தடுக்க வேண்டும். பொதுமக்கள் அதிகாரிகளுடன் முரண்படுகிற நிலையும் ஏற்படுகிறது. எனினும் அதை பொறுத்துக் கொண்டு அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

மக்களைப் பாதுகாக்கும் வகையில் சுகாதார வழிகாட்டுதல்களை இறுக்கமாக கடைப்பிடிக்க மக்களை வலியுறுத்த அதிகாரிகள் மற்றும் உரிய தரப்பினர் முன்வர வேண்டும் என்பதனையும் அவர் மேலும் தெரிவித்தார். (7-8-6-285)

# கோணாவிலில் தடுப்பூசி நிலையத்தினை உருவாக்குங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்திலும் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் நிலையம் உருவாக்கும்படி அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 1,100 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற கோணாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொவிட்-19 தடுப்பூசி நிலையம் உருவாக்கப்படாததன் காரணமாக ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கே போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் செல்ல வேண்டி உள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் கோணாவில் மகா வித்தியாலயத்தில் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் நிலையத்தினை உருவாக்கும்படி கோணாவில் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-8-6-350)

# விவசாயக் காணிகளை வழங்கக் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் விவசாயக் காணிகள் இன்றி வாழும் 75 வரையான குடும்பங்களுக்கு காணிகளை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் காணிகள் அற்ற குடும்பங்களுக்கு குடியிருப்பு காணிகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளபோதும் குறித்த குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்குரிய வயல் காணிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

எனவே தமக்கான வயல் காணிகளை பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.

அதாவது தமது பகுதிக்கு அண்மையாக உள்ள காஞ்சுரங்குளத்தினை புனரமைத்து அதன் கீழ் உள்ள வயல் காணிகளை வழங்குமாறு கோரியுள்ளனர்.

மேற்படி கிராமத்தில் உள்ள 75 வரையான குடும்பங்கள் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருவதனால் அதனை முன்னெடுப்பதற்கான சொந்தக்காணிகள் எதுவுமில்லை எனவும் இதனால் தாங்கள் தொடர்ந்தும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளதுடன், தமக்கான வயல் காணிகளை பெற்றுத்தருமாறு மக்கள் கோரியுள்ளனர். (7-8-315)

# பதுங்கு குழிகளை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களில் போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள், பதுங்கு குழிகள் முழுமையாக மூடப்படாததன் காரணமாக மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

தென்னை மரங்கள் உட்பட பயிர்ச் செய்கைக்காக நிலங்களைத் தயார்படுத்த முடியாமல் இருப்பதாகவும் பதுங்கு குழிகளில் காட்டு விலங்குகள், பாம்புகள் உறைந்திருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் போர்க்கால பதுங்கு குழிகளையும் மண் அணைகளையும் முழுமையாக அகற்றுவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைக்கப்பட்ட பாரிய மண் அணைகள் காரணமாக மழை காலத்தில் இயல்பாக வழிந்தோடும் வெள்ளம் தற்போது மக்கள் குடியிருப்புகளில் கடந்த பத்தாண்டுகளாக தேங்கி நிற்பதாகவும் இதன் காரணமாக மழை காலத்தில் அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 450 வரையான குடும்பங்கள் தொற்று நோய் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (7-8-6-350)

# அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளம், கொங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதியில் அதிகரித்துக்காணப்படும் சட்டவிரோத கசிப்பு விற்பனை கஞ்சா மற்றும் போதைப் பொருள் பாவனைகளால் பல்வேறு சிரமங்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் பிரதேசத்திற்குட்பட்ட கொங்காதரன் குடியிருப்பு, ஸ்கந்தபுரம், மணியங்குளம், கரித்தாஸ் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் தொடர்ந்தும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனால் மேற்படி கிராமங்களைச்சேர்ந்த கூடுதலான இளைஞர்கள் இவ்வாறான போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வருவதுடன் பல்வேறுபட்ட குற்றச்செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (7-8-6-315)

# குடி நீருக்காக நீண்ட தூரம் செல்லும் அவலம்

## ஆரோக்கியபுர மக்கள் விசனம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆரோக்கியபுரம் கிராமத்தில் குடிநீர் இன்மை காரணமாக பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமத்தில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதில் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தமக்கு தேவையான குடிநீரை கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் பகுதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையோரத்திலும் துணுக்காய் பிரதேசத்தின் பின்தங்கிய பகுதியிலும் குறித்த கிராமம் அமைந்துள்ள நிலையில் தமது பகுதிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொள்வதில்லை என்றும் வருடாந்தம் குறிப்பிட்ட ஒரு சில மாதங்களை தவிர ஏனைய காலங்களில் இவ்வாறு குடிநீர் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (7-8-6-315)

# அக்கராயனில் குடிநீர் வழங்கல் இடை நிறுத்தம்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர்த் திட்டத்தின் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக ஐந்து நாட்களுக்கு மேலாக குடிநீர் வழங்கல் அக்கராயனில் இடம்பெறவில்லை.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் வேலைத் திட்டங்களின் மூலமாக 488 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவது என திட்டமிடப்பட்டிருந்தது.

தற்போது 250 குடும்பங்களுக்கே குடிநீர் வழங்கல் இடம்பெற்று வந்த நிலையில் ஐந்து நாட்களுக்கு முன்னர் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக நீர் வழங்கல் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நல்லதொரு தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும் என அக்கராயன் மக்கள் வலியுறுத்தி உள்ளனர். (7-8-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

06.08.2021
ஆடி 21, வெள்ளிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 6.42 மணிவரை
திருவாதிரை காலை 7.37 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சந்திராஷ்டமம்- மூலம்
பிரதோச விரதம் வளவன்


மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.


ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


மிதுனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


கடகம்

பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.


சிம்மம்

குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் கிடைக்கும்.


கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.


துலாம்

தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

எதையும் யோசித்துச் செய்வது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.


தனுசு

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசி வழியில் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கௌரவமான நாள்.


மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

பேச்சில் கனிவு பிறக்கும், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடி கொள்ளும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

எடுப்பதைக் கொடுக்கும் வானம் போல இனிதே வாழ்

# இந்திய மீனவர்களால் எமது கடல்வளம் சுரண்டப்படுகிறது

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்கள்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீன்பிடியாளர்களால் எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ். இந்திய துணைத் தூதரகம் முன்பாக அணி திரளவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்கள் அறிவித்துள்ளன.**

இந்திய மீன்பிடியாளர்கள் மீது நாம் பகைமை காட்டவில்லை. ஆனால் நாளாந்தம் அவர்களால் எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளள முடியாதென தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் இந்திய மீன்பிடியாளர்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தாம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊடக அமையத்தில் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பொன்றை குறித்த சமாசங்களின் பிரதிநிதிகள் நடத்தியிருந்தனர். இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் தீவகம் மற்றும் தாளையடி பகுதிகளுக்குள் ஊடுருவிய இந்திய மீனவர்கள் எமது கடற்றொழிலாளர்களது பல கோடி பெறுமதியான வலைகளை அறுத்து நாசமாக்கிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்த குறித்த சமாசங்களின் பிரதிநிதிகள் இலங்கை அரசு இந்திய அரசிடம் இது தொடர்பில் பேசி நிரந்தர தீர்வை காணவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

மேலும் இந்திய மீனவர்கள் தமது சட்டவிரோத செயற்பாடுகளை மறைப்பதற்கு மீண்டும் இலங்கை கடற்படையினர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி பிரச்சினையைத் திசைதிருப்பி வருகின்றனர். ஆனால் சில தினங்களுக்கு முன்னர் இந்திய மீனவர்களின் ரோலர்களால் எமது கடற்றொழிலாளர்களின் பல இலட்சம் பெறுமதியான வலைகள் அழிக்கப்படவிருந்த நிலையில் இலங்கை கடற்படையினர் உடனடியாக அவ்விடத்திற்கு வந்து எமது கடற்றொழிலாளர்களை பாதுகாத்திருந்தனர்.

எனவே எமது கடற்தொழில் நடவடிக்கைகளை பாதுகாத்து எமது தொழிலாளர்களின் பொருளாதாரத்தை உறுதிசெய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் இந்த சட்டவிரோத கடல் நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய கடற்றொழிலாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகம் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8-6)

# ஏழு ஆண்டுகளாக மூடிய நிலையிலுள்ள துணுக்காய் ப.நோ.கூ.சங்க அரிசி ஆலை

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 4.5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியில் அமைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்ட அரிசி ஆலை கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

கடந்த யுத்தம் காரணமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலை மற்றும் அதன் கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேறியதையடுத்து அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதிப் பங்களிப்புடன் சுமார் 4.5 மில்லியன் ரூபாய் செலவில் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான அரிசி ஆலை புனரமைக்கப்பட்டு அதற்கான இயந்திரங்களும் வழங்கப்பட் டன.

இதனைப் பொறுப்பேற்றுக் கொண்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அதனை இயங்க வைக்காது கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக மூடிய நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக இவ்வாலை இயங்கும்போது பெருமளவான அரிசியை உற்பத்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது

இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதேசங்களின் அபிவிருத்தி மக்களின் வாழ்வாதாரம் என்பவற்றை மையப்படுத்தி பெருந்தொகை நிதியைச் செலவழித்து அமைக்கப்பட்டிருக்கும் இந்த அரிசியாலையானது செயலற்று கிடப்பது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் வெளியிட்டுள்ளனர். (7-8-315)

# தொற்றாளர்கள் அதிகரிப்பதனால் ஒட்சிசன் தேவையும் அதிகரிக்கும்

## வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளர்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதனால் ஒட்சிசன் தேவை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் கலைநாதன் ராகுலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வைத்தியசாலையில் சாதாரண நோயாளர்கள் மாத்திரம் பயன்படுத்திய ஒட்சிசன் தற்போது கொரோனா தொற்றாளர்களுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலையில் ஒட்சிசன் தேவை அதிகரித்த வண்ணமேயுள்ளது.

மக்கள் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாது சுகாதார நடைமுறைகளை இடைவிடாது பின்பற்றுவது தங்களையும் தமது மாவட்டத்தையும் பாதுகாப்பானதாக வைத்திருக்க உதவும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-8-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை ஆரம்பித்தார் தமிழக முதல்வர்

**(சென்னை)**

**கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே சாமனப்பள்ளி கிராமத்தில் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற உன்னதமான திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்றையதினம் வியாழக் கிழமை தொடக்கி வைத்தார்.**

இந்தியாவிலேயே தமிழகத்தில் முதன்முறையாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார்.

'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை தமிழகத்தில் கோவை, மதுரை, நெல்லை, சென்னை, கிருஷ்ணகிரி உட்பட 7 மாவட்டத்தில் நேற்று தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மக்கள் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், டயாலிசிஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும்.



மேலும் இந்தத் திட்டம் இந்த ஆண்டுக்குள் தமிழகம் முழுவதும் செயற்படுத் தப்படும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார். (8-7)

# தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய இந்தியாவுக்கு உதவும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

தடுப்பூசி உற்பத்தி செய்ய இந்தியாவிற்கு உதவி அளிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸை எதிர்த்துப் போராடும் வகையில் உலக நாடுகளுக்கு அமெரிக்கா பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அந்த வகையில் இந்தியா போன்ற நாடுகளுக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் திறனை வழங்க அமெரிக்கா முயன்று வருவதாக அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது இது குறித்து அவர் கூறியதாவது.

உலகம் முழுவதும் பல நூறு கோடி கொரோனாத் தடுப்பூசி தேவைப்படும் சூழலில், 50 கோடி கொரோனாத் தடுப்பூசிகளை வழங்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது.

மேலும் இந்தியா போன்ற நாடுகளுக்கு, தடுப்பூசிகளை அவர்களே உற்பத்தி செய்யும் திறனை வழங்கவும் நாங்கள் முயற்சிக்கிறோம். அதற்காக நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம். அதைத் தான் இப்போது செய்கிறோம். இது இலவசம். நாங்கள் யாரிடமும் எதையும் வசூலிக்கவில்லை. நாங்கள் எங்களால் முடிந்த வரை செய்ய முயற்சிக்கிறோம்.

உலகம் முழுவதும் கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்கான கூட்டு உலகளாவிய முயற்சியில் நாங்கள் வேறு எந்த நாட்டையும் விட அதிக பங்களிப்பை வழங்கியுள்ளோம்.

இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவுடனான எங்கள் கூட்டாண்மை மூலம் வெளி நாடுகளில் உற்பத்தி செய்யும் முயற்சிகளை நாங்கள் ஆதரித் துள்ளோம் எனவும் ஜோ பிடன் கூறினார். (8-7)

## துருக்கியில் தஞ்சம் அடைந்த 300 ஆப்கான் அகதிகள்



0

துருக்கி நாட்டிற்குள் அத்துமீறி நுழைய முயன்ற 300 ஆப்கான் அகதிகளை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்.

ஆப்கானிஸ்தானில் நடக்கும் உள்நாட்டுப் போரால் வீடுகளை இழந்த இலட்சக்கணக்கானோர் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

ஈரான் எல்லை வழியாகத் துருக்கி வந்தடைந்த சரக்கு லொறியை பாதுகாப்புப் படையினர் சோதனையிட்ட போது சிறுவர்கள், பெண்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் லொறிக்குள் பதுங்கி இருந்தது தெரிய வந்தது.

ஆப்கான் அகதிகளைக் கையாளத் துருக்கி அரசு தெளிவான நெறிமுறைகளை இன்னும் வகுக்காததால் பாதுகாப்பு படையினர் அவர்களைத் தற்காலிக முகாம்களில் தங்க வைத்துள்ளனர். (8-7)

# பெண் குழந்தைகளின் பி... வெளியான திடுக்கிடும்...

(ஜெனிவா)

உலகளவில் அடுத்த 10 ஆண்டுகளில், கிட்டத்தட்ட 5 மில்லியனுக்கும் குறைவான பெண் குழந்தைகளே பிறக்கும் என்று ஆய்வு ஒன்று கூறுகிறது.

பாலினத் தேர்வுகள் குறுகிய, நீண்டகாலத்தில் எந்த மாதிரியான தாக்கத்தை சமூகத்தில் ஏற்படுத்தும் என்பதை அறிய, சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் ஆய்வை ஒன்றை நடத்தினர்.

கடந்த 30 ஆண்டுகளில் பிறந்த மூன்று பில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டது.

ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்று கலாசார ரீதியாக விருப்பம் கொண்ட நாடுகளில், பாலினம் பார்த்து குழந்தையை முடிவு செய்யும் போக்கு இன்னமும் நிலவுகிறது.

அது வருங்காலத்தில் சமூக ஒற்றுமையைக் கீழறுக்கும் என்று ஆய்வு கூறியது.

மேலும் இத்தகைய போக்கால், 2030 ஆம் ஆண்டு உலகின் மூன்றில் ஒரு பங்கினரில், இளம் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்றும் ஆய்வறிக்கை சுட்டிக் காட்டியது.

தென் கிழக்கு ஐரோப்பா, தெற்காசிய, கிழக்காசிய நாடுகளில், கடந்த 40 ஆண்டுகளில், குழந்தைகளின் பாலினத்தை அறிந்து கருக்கலைப்பு செய்யும் நடைமுறை அதிகரித்துள்ளது.

பாலின பேதத்தை ஒழித்து சமத்துவத்தை உறுதிப்படுத்த சட்டக் கட்டமைப்புத் திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# பள்ளிக்குத் திரும்பும் மாணவர்களுக்கு தடுப்பூசி கட்டாயமில்லை

## உலக சுகாதார அமைப்பு

**(ஜெனிவா)**

**பள்ளிக்குத் திரும்பும் மாணவர்கள் தடுப்பூசிப் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**




பெரியவர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொண்டு பாதுகாப்பாக இருக் கும்படியும் அந்த அமைப்பு அறிவுறுத்தியு ள்ளது.

இது தொடர்பாகப் பேசிய உலக சுகாதார அமைப்பின் கொவிட் குழுவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் கேத்தரின் ஓ.பிரயின் குழந்தைகளுக்கும் பதின் பருவத்திருக்கும் தடுப்பூசி போட்டுத்தான் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று கட்டாயம் ஏதுமில்லை என்று தெரிவித்தார்.

இளம் வயதினரை விடவும் பெரியவர்களுக்குத்தான் நோய்ப் பாதிப்புக்கான அபாயம் அதிக மாக இருப்பதாக கேத்தரின் கூறி னார். (8-7)

# அமெரிக்காவில் புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற வான் விபத்து



(வோஷிங்டன்)

தெற்கு டெக்சாஸில் நேற்று முன்தினம் புதன்கிழமை 30 பேருடன் சென்ற வான் விபத்துக் குள்ளானதில் 10 பேர் உயிரிழந் ததுடன், ஏனையவர் கள் பலத்த காயமடைந்தனர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெக்சாஸின் என்சினோ அருகே அதிவேக நெடுஞ்சாலை யில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்ததாக டெக்சாஸின் பொது பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் கூறினார்.

வானில் பயணித்த பயணி கள் அனைவரும் புலம்பெயர்ந்த வர்கள் என்று ஆரம்ப கட்ட தக வல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த வானானது வேகக் கட்டுப்பாட்டினை இழந்து, வீதியை விட்டு விலகிஅருகிலிருந்த உலோ கப் பயன்பாட்டுக் கம்பத்தில் மோது ண்டே விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதுடன், பாதிக்கப்பட்ட வர்களின் அடையாளங்கள் உறு திப்படுத்தப்பட்ட பின்னர், அவர் களது குடும்பங்களுக்கு அறிவிக் கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்த னர். (8-9)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :- 4 278 646**

**தொற்று :- 201 398 067**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

# பிறப்பு தொடர்பில் ம் ஆய்வு தகவல்



## பங்களாதேஷில்

# திருமண நிகழ்வொன்றில் மின்னல் தாக்கம்

## 16 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றின் போது மின்னல் தாக்கி 16 பேர் பலியாகினர்

அத்துடன், சிலர் காயமடைந் துள்ளதாக சர்வதேச தகவல் கள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் இந்த ஆண் டின் இதுவரையான காலப்பகுதி யில் கடுமையான மழைவீழ்ச்சி பதிவாகியு ள்ளது.

ஆண்டுதோறும் மின்னல் தாக்கம் காரணமாக அதிகள வான உயிரிழப்புகள் பதிவாகி ன்றன.

மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப் பதற்காக அங்கு பல்லாயிரக்க ணக்கான பனை மரங்கள் நாட்டப்பட்டுள்ளதாக பங்களா தேஷ் அரசாங்க தரப்பினர் குறிப்பிடுகின்றனர். (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடு விதிக்காவிட்டால் டெல்டா தீவிரமாகப் பரவும்

(கொழும்பு)

**பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறினால் டெல்டா திரிபு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கடினமாகி விடும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.**

கொரோன வைரஸின் டெல்டா திரிபு இலங்கையில் பரவத் தொடங்கியுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறையில் டெல்டா வைரஸ் வேகமாகப் பரவி வருவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த சூழ்நிலையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாவிட்டால் ஒரு நாடாக டெல்டா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக மாறி விடும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-5)

# ஓரிரு வாரங்களில் கொரோனா பாதிப்பு இரட்டிப்பாகும்

## பேராசிரியர் சன்ன ஜயசுமன



(கொழும்பு)

இலங்கையில் தீவிரமான சுகாதார நெருக்கடி உருவாகி வருவதையும், ஓரிரு வாரங்களில் கொரோனாப் பாதிப்புக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகவோ அல்லது மும்மடங்காகவோ அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதையும் மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேற்று ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து சுகாதார அதிகாரிகள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், பி.சி.ஆர்., அன்டிஜன் சோதனை கருவிகள் மற்றும் ஒட்சிசன் கருவிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

மேலும் கட்டுப்பாடுகள் தளர்த்துவதை மக்கள் தவறாகப் பயன்படுத்துவது பாதிப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்தது.

தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் நோய் பரவுவதற்கு காரணமாகின்றனர்.

மக்கள் சில நேரங்களில் சுகாதார வழிகாட்டுதல்களை பொருட்படுத்தாமல் திருமண நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றனர்.

அண்மையில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளிடையே ஒட்சிசன் தேவையுடையோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு ஒட்சிசனின் உதவி தேவை என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். (நி-5)

# தீவிரமடையும் டெல்டா; நாளை வருகிறது ஆய்வு அறிக்கை



(கொழும்பு)

கொரோனா தொற்றின் திரிபடைந்த டெல்டா தொற்று தீவிரமடைந்திருப்பதாக கொழும்பு ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

டெல்டா தொற்றினை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதாக ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட போது அவர் தெரிவித்தார்.

இதுவரை கிடைத்த மாறுபட்ட கொரோனாத் தொற்றின் மாதிரிகள் தற்சமயம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில், நாளை சனிக்கிழமை இறுதியறிக்கையை வெளியிட எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# குறிப்பிட்ட தினத்தில் சிறுவர் வழக்குகள்

(கொழும்பு)

உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கு குறிப்பிட்ட திகதியை நிர்ணயிக்க நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பிறகு உடன்பாடு எட்டப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதான பத்திரன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2373

Search for people, places and things

### ராஜன்

குடுக்கிறது பழைய சோறு



ஆனால் வைக்கிற பெயர் "டைகர்"

### பிரபா

ஒரு நாள் நமக்கு பிடித்த மாதிரி நம்ம வாழ்க்கை மாறும்...



அதற்கு முன்னாடி நமக்கு என்ன பிடித்தது எது என்று நமக்கே மறந்து போயிடும்...

### அகரன்

ஓட்டப் பந்தயத்திலே கலந்து கொண்டியே.. என்னடா ஆச்சு?...



பயந்தாங்கொள்ளிப் பசங்க...எனக்கு பயந்துகிட்டு எனக்கு முன்னாலேயே ஓடிட்டானுங்கப்பா...

### சுகன்யா

புத்திசாலித்தனமாக பேசுறவங்க கம்மி தான்...



ஆனால் புத்திசாலினு நினைத்து பேசுறவங்க அதிகம்...

### வதனன்

காதலிக்கும் போது கவிதைகளையும்...



கல்யாணத்திற்கு பின் தத்துவங்களையும் தருகிறது வாழ்க்கை...

### சோபன்

கண்ணாடி தான்
என் சிறந்த நண்பர்
ஏனெனில்
நான் அழும் போது
அது ஒரு போதும்
சிரித்ததில்லை



- சார்லி சாப்ளின்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீனியா நோய்க்கான அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அணுகுமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

**பூஞ்சையால் ஏற்படும் டீனியா எனும் சரும நோய் ஆகும். இந்த தொற்றுக்கும் கொவிட் தொற்றுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என சரும நோய் விசேட மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.**

மனிதர்கள், விலங்குகள் மற்றும் மண்ணில் உள்ள விசேட பூஞ்சை ஒன்றின் ஊடாகவும் இந்தத் தொற்று பரவலடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நகம், தலைமுடி மற்றும் தோலின் வெளிப்புறம் போன்ற இடங்களில் இது வளர்ச்சி அடைவதாக ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தோல் அரித்தல், சிவப்பு புள்ளிகள் மற்றும் உடலில் அதிகம் வியர்க்கும் பகுதிகளில் இந்த அறிகுறிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சருமத்தை தூய்மையாக வைத்திருத்தல், மற்றவர்களின் ஆடைகளை பயன்படுத்தாமல் இருத்தல், தளர்ந்த ஆடைகளைப் பயன்படுத்தல், செல்லப் பிராணிகளுடன் பழகுவதை குறைத்தல் போன்றவற்றின் மூலம் இந்த சருமநோய் ஏற்படுவதை தடுக்க முடியும் என விசேட வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியும் என்பதுடன் நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனேயே மருத்துவரை அணுகுமாறும் அறிவுறுத்தியுள்ளனர். (நி-5)

# கொத்தலாவல சட்ட மூலத்தை முழுமையாக நீக்க வேண்டும்

## ஹரினி அமரசூரிய

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தில் ஒரு சில திருத்தங்களை மேற்கொள்வதால் மாத்திரம் இலவச கல்விக்கு ஏற்படப்போகும் பாதிப்பை நிவர்த்தி செய்துகொள்ள முடியாது. ஆகவே இச் சட்டமூலத்தை அரசாங்கம் முழுமையாக நீக்கிக் கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் தற்போது அரசாங்கத்திற்கு சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளது. ஆளும் கட்சியின் பங்காளி தரப்பினர்கள் இச்சட்டமூலத்தை கொண்டு வரவேண்டிய திருத்தம் தொடர்பில் தங்களின் கட்சி மட்டத்தில் யோசனை முன்வைத்துள்ளார்கள்.

இலவச கல்விக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தில் ஒரு சில விடயங்களில் மாத்திரம் திருத்தம் மேற்கொண்டால் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடாது. சட்டமூலம் திருத்தம் செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவின் கீழ் கொண்டு வரப்படும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

# பில்லியன் கணக்கில் செலவிடும் அரசாங்கம் ஆசிரியர்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும்



(கொழும்பு)

மனிதநேயம் அற்ற இலங்கை இராணுவத்தினருக்கு பில்லியன் கணக்கில் செலவிடும் ராஜபக்ஷ அரசாங்கம், நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது செல்வராசா கஜேந்திரன் இதனை சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை ஆட்சியாளர்களால் இன அழிப்பு செய்யப்பட்ட தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் திருத்தங்களை தற்போதைய ஆட்சியாளர்கள் முன்வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# காலி போதனா வைத்தியசாலையும் அவசர நிலையை அறிவித்தது

(காலி)

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையும் நேற்று முதல் அவசர நிலையை அறிவித்துள்ளது.

அந்த வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் நாயகத்தின் கையெழுத்து அடங்கிய கடிதமொன்று வைத்தியசாலையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா தொற்றாளர்கள் அனுமதிக்கப்படுகின்ற எண்ணிக்கை சடுதியாக அதிகரித்த காரணத்தினால் இவ்வாறு அவசர நிலையை அறிவிப்பதாக அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் முதல் இரத்தினபுரி வைத்தியசாலையும் அவசர நிலையை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிந்தித்துச் செயற்படுவோம்!

ஒரு ஊரிலே ஒரு ஆள் இருந்தான். அவனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை. இவன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்து விட்டான். நேராக தன்னுடைய நண்பன் ஒருத்தனை தேடிப் போனான்.

அந்த நண்பன் எப்படி என்றால் எதற்கும் அசர மாட்டான். எப்பவும் மகிழ்ச்சியாக இருப்பான். அவனிடம் போய் இவன் யோசனை கேட்டான். "அதுசரி நீ எப்படி எப்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறாய். என்னாலே அப்படி இருக்க முடியவில்லை!" என்றான்.

"என்ன நடந்தது சொல்லு" என்றான் இவன். "வீட்டிலே எனக்கும் மனைவிக்கும் தகராறு. அதுதான் இங்கே வந்தேன் உன்னிடம் யோசனை கேட்கலாம்" என்று விபரத்தைச் சொன்னான். அதைக் கேட்டுவிட்டு அதற்கு பிறகு இவன் சொன்னான்... "இதோ பார் இது ஒன்றும் பெரிய விடயமில்லை. எனக்கு இரண்டு மனைவிகள். இரண்டு வீடுகள். ஒரு வீட்டிலே சண்டை வந்து விட்டது என்றால் இன்னொரு வீட்டுக்கு வந்து விடுவேன். மற்றைய வீட்டில் சண்டை வந்து விட்டது என்றால் முதல் வீட்டுக்குப் போய் விடுவேன். இரண்டு குடும்பம் என்பதால் இப்படி ஒரு வசதி. இதுதான் என் மகிழ்ச்சியின் இரகசியம்" என்றான்.

ஓ அப்படியா விடயம். இப்போது புரிந்து கொண்டேன். உன்னுடைய யோசனைக்கு ரொம்ப நன்றி என்று சொல்லி விட்டு திரும்பி வந்தான். அங்கே இங்கே தேடினான். ஒரு வாரத்திற்குள்ளே இன்னொரு பெண்ணைத் தேடிக் கண்டு பிடித்து இன்னொரு திருமணம் செய்து கொண்டான். இப்போது இவனுக்கு இரண்டு வீடு ஆகிவிட்டது. அதற்குப் பிறகு என்ன ஆகிவிட்டது தெரியுமா? இவன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டது அந்த முதல் மனைவிக்கு தெரிந்து போய் விட்டது.

போ வெளியே என்று பிடித்துத் தள்ளி கதவை சாத்திவிட்டார் அந்த அம்மா. பரவாயில்லை என்று இவன் வெளியே வந்தான். நேராக இரண்டாவது மனைவி வீட்டுக்குப் போனான். அந்த வீட்டிலேயும் தகராறு. முதல் மனைவி இருக்கின்ற போது எதற்காக என்னையும் திருமணம் செய்து கொண்டாய்? என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி கதவை சாத்திட்டார்.

இவன் வீதிக்கு வந்து விட்டான். இப்போது அங்கேயும் போக முடியவில்லை. இங்கேயும் போக முடியவில்லை. என்ன இது அவன் சொல்லிக் கொடுத்த யோசனை சரியாக வரவில்லை என்று யோசனை செய்து கொண்டு நடந்தான்.

வழியில் ஒரு பாழடைந்த மண்டபம். சரி இன்றைக்கு இரவு இங்கேயே உறங்கிடுவோம் என்று நினைத்துக் கொண்டு தூண் ஓரமாக உட்கார்ந்தான். எதிரிலே இன்னொரு தூண் ஓரமாக யாரோ அசைவது மாதிரித் தெரிந்தது.

"யாரது" என்றான். அருகில் போய் முகத்தைப் பார்த்தான். பின்பு தான் தெரிந்தது அவன் ஏற்கனவே இவனுக்கு யோசனை சொல்லிக் கொடுத்த நண்பன். "டேய் நீ எப்படி இங்கே என்றான்? இரண்டு வீட்டிலும் சண்டை. அதுதான் இங்கே வந்தேன் உறங்கலாம்" என்று.

"இரண்டு வீடு இருக்கின்றன. சௌகரியம் என்று என்னிடம் சொன்னாயே" என்றான் இவன். "நான் அப்படி சொன்னதற்கு ஒரு காரணம் உண்டு" என்றான் அவன்.

"என்ன காரணம்" என்று கேட்டான் இவன். "அது வந்து வேறு ஒன்றும் இல்லை. தினமும் இரவில் இந்த மண்டபத்தில் தனியாக உறங்குவதற்கு எனக்குப் பயமாக இருந்தது. துணைக்கு நம்மை மாதிரியே இன்னொருத்தர் கிடைத்தால் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்தேன். அதுதான் உனக்கு அந்த யோசனை சொன்னேன்.

வா இப்படித் துண்டை கீழே விரித்துப் போட்டு கையை தலைக்கு வைத்துக் கொண்டு பேசாமல் படுத்துத் தூங்கு" என்றான் அவன். நம்முடைய வாழ்க்கையிலே முடிவு எடுக்கின்ற விடயத்தை இந்த ஆள் மாதிரித்தான் பலபேர் நடந்து கொள்கிறோம் என்கிறார். எம்.ஸ்காட் பெக் (உலகப் புகழ்பெற்ற மனோதத்துவ மேதை).

வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்குவதில் இருந்து திருமணம் செய்வது வீடு கட்டும் வரைக்கும் அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு வீணாகப் போகின்றவர்கள் தான் அதிகம். அறிவுரை கேட்பதில் தப்பில்லை. ஆனால் அதற்குப் பிறகு அதைப்பற்றி சரியாக சிந்திப்பது இல்லை. அதுதான் தப்பு.

சிலபேர் அறிவுரை சொல்வதிலே ரொம்பத் தெளிவாக இருப்பார்கள். "ஏன் சேர் இரண்டு சம்சாரத்துடன் குடும்பம் நடத்துவது கஷ்டமா?" என்று கேட்டார் ஒருத்தர்.

"எனக்குத் தெரியாது என்றார்" அவர். "ஏன்" என்று கேட்டார். ஏனென்றால் எனக்கு மூன்று சம்சாரம் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

01

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### மாகாண சபைகள்

இலங்கையில் மாகாண சபைகள் (Provincial Councils) என்பது இலங்கை மாகாணங்களுக்கான சட்டவாக்க அவை ஆகும். இலங்கை அரசியலமைப்பின்படி, மாகாண சபை ஆனது குறிப்பிட்ட மாகாணத்தின் வேளாண்மை, கல்வி, சுகாதாரம், வீடமைப்புத் திட்டம், உள்ளூராட்சிகள், சாலை வழிப்போக்குவரத்து, சமூக சேவை போன்றவற்றின் நிர்வாகங்களைக் கவனிக்கும்.

இவற்றைவிட பொலிஸ் அதிகாரம், காணி போன்றவற்றுக்கும் அரசியலமைப்பின்படி இதற்கு அதிகாரங்கள் உள்ளன. ஆனாலும் மத்திய அரசு இவற்றுக்கான அதிகாரங்களை மாகாண அரசுக்கு வழங்க மறுத்து வருகின்றது. மாகாண சபைக்கு தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### தற்போதைய மாகாண சபை நடைமுறை

மாகாண சபையின் கட்டமைப்பு சனத்தொகை அடிப்படையிலும் நிலப்பரப்பு அடிப்படையிலும் தீர்மானிக்கப்பட்டது. அண்ணளவாக 1000 சதுர மைல்களுக்கும் 40,000 மக்களுக்கும் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் மாகாண சபைகளின் அங்கத்தவர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

யாப்பின் 154 ஆவது உறுப்புரையில் ஜனாதிபதி ஒவ்வொரு மாகாணத்திற்கும் பெயரிட்டு அதன் அங்கத்தவர் எண்ணிக்கையை தீர்மானிப்பார். தேர்தலின்போது ஒரு மாவட்டம் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்படும்.

இதன்படி ஒரு மாகாண சபை இரண்டு அல்லது மூன்று தேர்தல் தொகுதிகளைக் கொண்டதாக அமையும். மொத்தமாக இலங்கையில் செயற்படும் மாகாணசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 455 ஆகும்.

இதில் 437 பேர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தல் மூலமும் 18 பேர் மேலதிக ஆசனங்களாகவும் தெரிவு செய்யப்படுவர். தேர்தலின் போது அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் பெறும் வாக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவர். ஒவ்வொருவரும் பெற்ற விருப்புவாக்குகளின் படி கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் மாகாணசபை அங்கத்தவர்கள் யார்? என்பது தீர்மானிக்கப்படும். மாகாண சபைகளின் பெயரளவு நிறைவேற்று நிர்வாகம் முதலமைச்சரின் அபிப்பிராயத்துடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநரிடம் விடப்படும்.

ஆளுநர் ஜனாதிபதியின் உடன்பாடு இருக்கும் வரை மாகாண சபைகளின் அங்கத்தவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும்வரை ஐந்து வருடங்கள் பதவியில் இருப்பார். மாகாண சபையில் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் ஆளுநரைப் பதவி நீக்கலாம்.

முதலமைச்சருடன் கலந்துரையாடி மாகாண சபையைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்தி வைத்தல் என்பன ஆளுநரின் பொறுப்புக்களில் சிலவாகும். முதலமைச்சரே மாகாண சபையின் பிரதான நிறைவேற்று நிர்வாகியாவார். மாகாண சபையில் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் நம்பிக்கையை வென்றவர் ஆளுநரால் முதலமைச்சராக நியமிக்கப்படுவார். தேர்தலில் 50% இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் வெற்றி பெற்ற கட்சியின் அல்லது குழுவின் தலைவரே இவ்வாறு முதலமைச்சராக நியமனம் பெறுவார்.

முதலமைச்சர் மாகாண சபை அங்கத்தவர்களில் நால்வரை அமைச்சர்களாக நியமிப்பார். முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் தம் கருமங்கள் தொடர்பாக மாகாண சபைக்கு பொறுப்புச் சொல்ல கடமைப்பட்டுள்ளனர்.

### மாகாண சபைகள் உருவான வரலாறு

மாகாண [illegible] முதன் முறையாக 1987 இல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதற்குரிய காரணம், இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் 1987 ஜூலை 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தமாகும்.

1987 இல் இலங்கை அரச தரப்பு படைகளினால் தமிழீழ விடுதலை புலிகள் (எல்ரீரீஈ) இயக்கத்திற்கு எதிராக பாரிய அளவிலான யுத்த நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்ட போது அது விசேடமாக தென்னிந்தியாவில் கடும் கொந்தளிப்பு நிலை எழவைக்க, அந்நிலை காரணமாக சர்வதேச அரசியல் காரணிகளின் பேரில் இந்திய அரசாங்கம் இப்பிரச்சினையில் நேரடியாகவும் அபிப்பிராய பேதத்துடனும் தலையிட்டது. தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய மன உளைச்சலை ஒழிப்பதற்கான ஒரே தீர்வு அதிகாரப் பகிர்வு மட்டுமே என்ற கடும் நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் கொண்டிருந்தது. அதன் பிரதிபலனாக இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அதன்படி, அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டும், ஏனைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் 1978 அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. சொல்லப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் 13 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தம் கொண்டு வரப்பட்டது.

பிரதானமாக 1978 அரசியலமைப்பின் 18 ஆவது உறுப்புரை [illegible] இயமைத்து தமிழ் [illegible] உத்தியோகபூர்வ மொழியாக ஏற்று அங்கீகரிக்கும் பதங்களுக்கிடையில் 138 ஆம் பிரிவு திருத்தப்பட்டு அந்தந்த மாகாணத்திற்கான மாகாண மேல் நீதிமன்றம் வீதம் நிறுவப்பட்டது.

மிக முக்கிய திருத்தம் யாதெனில், 1978 அரசியலமைப்புக்கு புதிதாக சேர்க்கப்பட்ட 154 ஆவது உறுப்புரையாகும். அதன்மூலம், இலங்கை (1988 பெப்ரவரி 3 இல்) 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாண சபை வீதம் நிறுவப்பட்டது. இம்மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் குறித்த விளக்கமொன்று சொல்லப்பட்ட திருத்தத்தின் 9 ஆவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதுடன், சொல்லப்பட்ட அதிகாரங்கள் 3 பகுதிகளாக பிரித் தொதுக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றி முன்னர் பல கட்டுரைகளில் பார்த்தோம்.

மாகாண சபைகளுக்கு மட்டும் உரித்தான அதிகாரங்கள் மாகாண சபை நிரலில் காட்டப்பட்டிருந்ததுடன், இவ் விடயங்களுக்குரிய சட்டவாக்கங்களை மேற்கொள்ளும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு மட்டும் உரித்தாயின.

ஒருங்கிய நிரலில் குறித்த விடயங்கள் தொடர்பான அதி காரம் பொதுவாக மாகாண சபைகள், பாராளுமன்றம் ஆகிய இரு வகை நிறுவனங்களுக்கும் பொதுவாக உரித்தானதாக இருந்தது. மூடிய நிரலுக்குரிய விடயங்கள் தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்திற்கு மாத்திரம் உரித்தாதாக இருந்தது.



இந்த 13 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தம் ஓர் அவசர வரைவாகக்கொண்டுவரப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றமையால் மாற்று வழிகள் இன்றி நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறை காரணமாக லாப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமையை அடுத்து இந்நிலை ஏற்பட்டது.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்தமையை அடுத்து இலங்கையிலும் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

எவ்வாறிருப்பினும் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்படவில்லை.

மேலும் டொலர் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் கடன் உறுதி கடிதத்தை திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் லாப்ஸ் எரிவாயு நிறுவனம் இறக்குமதி செய்வதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக அறிவித்திருந்தது. (நி-5)




பல்கலைக்கழக ஆணைக்குழுவை சுயாதீனமாகவும் அதிகாரம் மிக்கதாகவும் மாற்றி "கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டத்தை கிழித்தெறி" எனும் தொனிப்பொருளில் நேற்று மட்டக்களப்பில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



### புண்ணியத்தைச் சேர்க்கும் ஆடி அமாவாசை



விரதம் மேற்கொள்வதன் மூலம் நாம் விரும்பிய பலன்களை விரும்பியவாறே பெற்றுக்கொள்ள முடியும். விரதத்தில் வழிபாடு செய்வது முக்கியமானது.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஆன்றோர் வாக்கு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்போர் வணக்கத்துக்கு உரியவர்கள். விரதங்களில் பலவகை உண்டு. இறைவன், இறைவி குறித்து கடைப்பிடிக்கப்படும் விரதங்கள், தெய்வங்களாகி விட்ட தாய், தந்தை ஆகியோரை எண்ணி மேற்கொள்ளப்படும் விரதங்கள் என்று அவை பலவகைப்படும்.

அமாவாசை, பௌர்ணமி திதிகளில் கடைப்பிடிக்கப்படும் இரண்டு விரதங்களும், முறையே காலமான தாய், தந்தை ஆகியோரை குறித்து அவர்கள் நற்கதியடைய அவர்களின் பிள்ளை களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் ஆகும்.

சூரியனை பிதுர்க்காரகன் என்றும், சந்திரனை மாதுர்க்காரகன் என்றும் அழைக்கிறார்கள். இவர்களை சிவசக்தி சொரூபமாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. சூரியனும், சந்திரனும் சேரும் புனிதமான ஆடி அமாவாசையன்று முன்னோர்களையும், இறந்த தாய், தந்தையரையும் நினைத்து திதி கொடுப்பது நல்லது. புண்ணிய நதிகள், கடல் போன்ற இடங்களில் புனித நீராடி இஷ்ட தெய்வங்களை வழிபட்டு, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம், வஸ்திர தானம் செய்தால் பாவங்கள் விலகும். தீ வினைகள், கர்ம வினைகள் அனைத்தையும் போக்கி வாழ்வில் புண்ணியத்தை சேர்க்கும்.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசை திதி, பிதுர் வழிபாட்டிற்கு புண்ணியமான தினம் என சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதி மீறல் மேலும் 123 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறியமைக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 123 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமைக்காக இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 53 ஆயிரத்து 266 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 45 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் 7 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்பட உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (நி-5)

## மாத்தளையில் பாரிய மண்மேடு சரிந்து ஒருவர் பலி

(மாத்தளை)

மாத்தளை - மஹாவெல, கவுடுபெலல்ல பகுதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். மாத்தளை குருகஸ்பிட்டியவை சேர்ந்த 42 வயதான ஒருவரே இதில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக மாத்தளை மாவட்ட பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹாவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது லொறி ஒன்றும் மண்ணுக்குள் புதையுண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண் அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 170 | 180 | 180 | 200 |
| கரட் | 180 | 170 | 200 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 | 120 |
| புடோல் | 80 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 280 | 270 | 400 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 160 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 280 | 200 | 250 |
| பீற்றூட் | 120 | 120 | 140 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 250 | 160 |
| போஞ்சி | 200 | 280 | -- | 360 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | -- | 250 | 280 | -- |
| வெங்காயப்பூ | 180 | 160 | 260 | 280 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | 40 | 40-50 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீராதி வீரன்

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் பால்பாண்டி என்ற இளைஞன் இருந்தான். தன் குலத்தொழிலான செருப்பு தைக்கும் தொழிலைச் செய்து வந்தான்.

"ஏதேனும் வீரச் செயல் செய்ய வேண்டும். எல்லாரும் தன்னைப் பாராட்ட வேண்டும்" என்று எண்ணியபடி இருந்தான். கடைக்குச்சென்ற அவன்வெண்ணெய் வாங்கினான். அதை மேசையின் மேல் வைத் தான்.

செருப்புதைக்கத்தொடங்கினான். ஏராளமான ஈக்கள் வெண்ணெயை மொய்த்துக் கொண்டிருந்தன.

இதைப் பார்த்த அவன் கோபம் கொண்டான். செருப்பை எடுத்து வெண்ணெய் மீது ஓங்கி ஓங்கி அடித்தான். நிறைய ஈக்கள் இறந்தன. ஏராளமான ஈக்கள் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தன.

அவற்றை எண்ணினான். இறந்த ஈக்களின் எண்ணிக்கை இருநூறு இருந்தன. அடிபட்ட ஈக்களின் எண்ணிக்கை முந்நூறு இருந்தது. தன் வீரத்தை நினைத்த அவனுக்குப் பெருமையாக இருந்தது.

கடைக்குச் சென்ற அவன், வீரர்கள் அணியும் உடைகளை வாங்கினான். அவற்றை அணிந்து கண்ணாடியின் முன் நின்று பார்த்தான். அவனுக்கே பெருமை தாங்கவில்லை.



மாவீரனைப் போலப் பெருமிதமாக நடந்து தலைநகரத்தை அடைந்தான். தயக்கம் ஏதும் இல்லாமல் அரசவைக்குள் நுழைந்தான்.

அரசரை வணங்கிய அவன், "என்னைப்போன்ற மாவீரன் யாருமே இருக்க முடியாது. ஒரே நாளில் நான் இருநூறு பேரைக் கொன்றேன். முந்நூறு பேரைக் காயப்படுத்தினேன்," என்று பெருமை பொங்கச் சொன்னான்.

அவனை மேலும், கீழும் பார்த்தான் அரசன். "உன்னைப் பார்த்தால் வீரனைப் போலத் தெரியவில்லையே. தோற்றத்தை வைத்து யாரையும் மதிப்பிடக் கூடாது.

உன் வீரத்திற்கு ஒரு சோதனை வைக்கப் போகிறேன்," என்றான். "அரசே! சோதனை என்னவென்று சொல்லுங்கள். என் வீரத்தை உங்களுக்கு வெளிப்படுத்துகிறேன்!"

(தொடரும்)

## மகாபாரதம்

147



அளவற்ற செல்வங்களை வாரி வாரி வழங்கினான். கொடைவள்ளலான அந்த பிரகத்ரதனும் இறந்து போனான்.

சிபி என்னும் அரசன் உலகம் அனைத்தும் ஒரே குடையின் கீழ் ஆண்டவன். அவன் தன் நாட்டில் உள்ள பசுக்களை மட்டுமன்றி காட்டில் உள்ள பசுக்களையும் யாகத்தின் போது தானம் செய்து உயர்ந்திருந்தான்.

பிரமதேவரே அவனது பெருமையைக் கண்டு பெருமிதமடைந்தார். அத்தகைய பெருமை மிக்கவனும் இறந்து விட்டான்.

செல்வங்களைக் குவியல் குவியலாய் பெற்றவன் பரதன் என்னும் மன்னன் ஆயிரம் அசுவமேத யாகங்களையும் நூறு ராஜசூய யாகங்களையும் செய்த பெருமை மிக்கவன்.

அந்த பரதன் செய்த செயற்கரிய செயல்களை தம்மால் செய்ய முடியவில்லையே என அக்கால மன்னர் எல்லாம் ஏங்கினர். யாகத்தின் போது அம்மாமன்னன் கோடிக்கணக்கான பசுக்களை தானம் செய்தான்.

உன்னையும் உன் மகனையும் விட சிறந்தவன் இறந்து விட்டான்.

ராமரைவிட சிறந்தவரை காணமுடியுமா? உலக உயிர்களில் அவர் காட்டிய அன்பிற்கு ஈடு உண்டா? அந்தப் புண்ணியரின் ஆட்சியில் மக்கள் நோய்த் துன்பமின்றி வாழ்ந்தனர். மாதம் மும்மாரி பெய்தது. மக்கள் பயமின்றி மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

பதினான்கு ஆண்டு கால வனவாசத்திற்குப் பிறகு பல அசுவமேத யாகங்களைச் செய்தார். அயோத்தியில் ராம ராஜ்யம் நீடித்திருந்தது. அந்த ராமனும் மரணமடைந்தான்.

பகீரதன் பற்றி அறியாதார் இல்லை. அவன் ஆயிரம் ஆயிரம் குதிரைகளையும், யானைகளையும், தேர்களையும், பசுக்களையும், ஆடுகளையும் தானம் செய்தவன்.

அவன்மடியில்கங்கை ஒரு குழந்தை போல அமர்ந்திருந்தாள். அதனால் கங்கை அவனுக்கு மகளானாள்உம்மையும் உம் மகனையும் விட சிறந்த அந்த பகீரதனும் மரணம் அடைந்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். மீண்டும் தர்மமே வெல்லும்.*

*– பகவத்கீதை*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மரணம் துரத்துகிறது இனியேனும் விழித்தெழுங்கள்!

ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறும் போது அதனால் வெறுப்பும் ஏற்படலாம். விழிப்பும் ஏற்படலாம்.

வெறுப்பு ஏற்படுமாயின் அங்கு விழிப்புக்கு இடமில்லை. மாறாக விழிப்பு ஏற்படுமாயின் குறித்த விடயம் தொடர்பான கருசனையும் தேடலும் பின்பற்றலும் வலிமை பெறும்.

இங்கு கொரோனா பற்றி நாம் திரும்பத் திரும்ப எழுதுவதெல்லாம் மக்களிடையே விழிப்பை ஏற்படுத்துவதற்கானது.

இருந்தும் கொரோனா பற்றிய தகவல்கள் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றன.

இதற்கு மேலாக, கொரோனாவின் ஆபத்துக் குறித்து இலங்கை அரசாங்கம் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

மாறாக, மருத்துவர்களும் பொதுசுகாதாரப் பரிசோதகர்களும் கொரோனாவின் தீவிரம் பற்றிச் சதா எச்சரிக்கை செய்த வண்ணமுள்ளனர்.

தவிர, கொரோனாவால் ஏற்படுகின்ற மரணங்கள் மறைப்புச் செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் பரவலாக உண்டு.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாத் தொற்றின் திரிபு நிலை மிகப்பெரும் பேராபத்தை ஏற்படுத்தப் போகின்றது.

மக்கள் வீதியில் விழுந்து கிடப்பர். வைத்தியசாலைகள் எங்கும் மரண ஓலம் ஒலிக்கும். இறந்தவர்களின் உடலங்களை எரிக்க முடியாத அளவில் திண்டாட்டம் ஏற்படும் என்றெல்லாம் மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

இருந்தும் பொதுமக்கள் தம்பாடு என்பதாகவே நிலைமையுள்ளது.

அதிலும் பொதுமக்களில் ஒரு தரப்பினர் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது, கொரோனா பற்றிய எண்ணம் அவர்களிடம் இம்மியும் இல்லை என்றுணர முடிகின்றது.

அந்தளவுக்கு கொரோனா பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை.

இவ்வாறானதோர் சூழ்நிலை மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தப் போகிறது.

அதிலும் குறிப்பாக கொரோனாவின் ஆபத்துக் குறித்து அரசாங்கம் எச்சரிக்கை செய்யாத விடத்தும் – அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தாத நிலையிலும் கொரோனாவால் ஏற்படக்கூடிய ஆபத்தை பொதுமக்கள் உணர மறுப்பர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

எது எவ்வாறாயினும் இனியும் நாம் மனித உயிரிழப்பை சந்திக்க முடியாது. பெருந்துயரை அனுபவிக்க முடியாது.

ஆகையால் கொரோனா எனும் பெருந்தொற்று ஏற்படுத்தக்கூடிய பேராபத்தில் இருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

ஆம், கொரோனா வடிவில் மரணம் எங்களைத் துரத்துகிறது. இனியும் நாம் விழித்தெழாவிட்டால், அந்தோ கதிதான்!

ஆகையால் மக்களே! விழித்தெழுங்கள்! கொரோனாத் தொற்றின் பேராபத்தை உணர்ந்து கொள்ளுங்கள். அதில் இருந்து தப்பித்துக் கொள்ளும் உபாயங்களை இம்மியும் பிசகாமல் அமுல்படுத்துங்கள். இறைவனை நம்பிக்கையோடு வேண்டுதல் செய்யுங்கள். மனுக்குலம் வாழ்வதற்காக இதைப் பின்பற்றுங்கள்.

# புதிய மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் உட்பட அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள அனைத்து கைதிகளுக்கும் 'சினோபாம்' தடுப்பூசி நேற்றைய தினம் செலுத்தப்பட்டது.

அந்த வகையில் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 தமிழ் அரசியல் கைதிகளும் குறித்த தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

தடுப்பூசியை எற்றல் தொடர்பான மருத்துவர்களின் விளக்கமளிப்புகளுடன் கைதிகளுக்கு ஊசி ஏற்றும் நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாக அரசியல் கைதிகளின் உறவுகள் குரலற்றவர்களின் குரல் அமைப்புக் குத் தெரிவித்தனர்.

கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கான சுயவிருப்ப ஒப்புதல் படிவம் ஒன்று நிரப்பப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட பின்னரே அவர்களுக்கான ஊசி செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர். (ம-3)

## கொடிகாமத்தில் விபத்து ஒருவர் படுகாயம்

கொடிகாமம் நகர்ப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொடிகாமம் சந்தியில் உள்ள வீதிச் சமிக்கை விளக்கில் மோட்டார் சைக்கிளை நிறுத்திய நபரை பின்னால் வந்த இ.போ.ச பேருந்து மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் அச்சுவேலி - பத்தைமேனி பகுதியைச் சேர்ந்த 47 வயதான சு.ஜெயபாலகிருஸ்ணன் என்பவரே கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-30)

## வண்ணார்பண்ணை வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வரலக்ஷ்மி நோன்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரத ஆரம்ப நிகழ்வும் காப்பு வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 20.08.2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

மூலமூர்த்தி மற்றும் மஹாலஷ்மி அம்பாளிற்கு விஷேட பூஜை நடைபெற்று வசந்த் மண்டப பூஜையும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருதலுடன் காப்பு வழங்கும் வைபவமும் இடம்பெறும். அடியவர்கள், தற்போது கொரோனா பரவல் மிக அதிகமாக உள்ள காரணத்தினால் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை தவறாது இறுக்கமாக பேணுவது அவசியமானது. விரதத்திற்கான காப்பு எடுக்கும் அடியவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர், நட்சத்திரம் என்பவற்றை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஐம்புலன்களின் இயல்பே ஞானம்

ஒருபுலன் இல்லாவிட்டால் மற்றப் புலன்கள் உயர்ந்திருப்பதைச் சிலரிடம் காண்கிறோம் என்று ஒருவர் கூறினார். ஒன்றை கூர்மை (மேன்மை) யாக்குவதற்கு நீங்கள் மற்றொன்றை இழக்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் ஆழ்ந்த மௌனத்தின் மூலம் கூர்மையாக்கிக் கொள்ளலாம் என்று குருஜி கூறினார்.

உணர்வே இல்லையென்றால் என்ன நடக்கும்? என்று மிக்கி என்பவர் கேட்டதற்கு குருஜி பதிலளித்தார். நீங்கள் மிக்கி ஆகிவிடுவீர்கள் என்று (சிரிப்பால் அறையே வெடித்தது)

புத்தாண்டுப் பயிற்சி- ஒவ்வொரு அணுவிற்கும் பார்க்கும் மற்றும் கேட்கும் திறன் உண்டு என்பதை உணருங்கள். ஒவ்வொரு செல்லும் (Cell) கண்ணும் காதுமாகிவிடுகின்றன. நன்கு வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள்... கண்களை மூடிக்கொள்ளுங்கள்... நீங்களே கண்களாகவும் காதுகளாகவும் இருப்பதைக் கவனியுங்கள்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஆட்டைக் கொன்று யாகம் செய்வது பிழையாகும். அஜம் என்ற சொல்லுக்கு முளைக்காத பழைய நெல் என்று பொருள். (ஜம்- தோன்றுவது, அஜம்- தோற்றமில்லாதது)

அஜம் என்ற பழைய நெல்லால் வேள்வி செய்வது என்ற கருத்தை உணராமல் அஜம் என்ற சொல்லுக்கு ஆடு என்ற அர்த்தம் செய்து கொண்டு ஆட்டைக் கொன்று வேள்வி செய்யத் தொடங்கினார்கள். "தீதா வசவனியாஞ் செய் வேதியரே" என்று வரும் கந்தரந்தாதி 31 ஆவது பாடலால் அறிக. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, [illegible] மணியந்தோட்டம், பாசையூர், பாசையூர் ஈச்சமோட்டை வீதி, பெரியகோவில் வீதி, புங்கன்குளம், கொழும்புத்துறை வீதிச் சந்தி, உதயபுரம், தூதாவளை ஆகிய இட ங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 66 ஆம் பிரிவு இராணுவ முகாம் பூநகரி, இராணுவ ஆதார வைத்தியசாலை, பூநகரி பிரதேச [illegible] கிளிநொச்சி [illegible]மனை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம் கிளிநொச்சி, நெற்களஞ்சிய சாலை, விக்ரமரத்ன (பிறைவேற்) லிமிடெட், 4 ஆவது மைல்கல் பூநகரி, ஆனந்தபுரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, பாரதிபுரம், இரங்கை மின்சார சபை, உப மின் நிலையம், ஞானிமடம், கௌதாரிமுனை, கனகாம்பிகைக்குளம், கறுக்காய்தீவு, கொல்லக்குறிச்சி தம்பிராய், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், நல்லூர் பூநகரி, நெற்பிளவு, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித்திட்டம், பரமன் கிராய், செம்மணகுன்று, தம்பிராய், வாடியடி பூநகரி, வெட்டுக்காடு (கௌதாரிமுனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரி முனை), விநாயகபுரம், மாங்குளம், நீதிமன்ற வளாகம், பனிக்கன்குளம், குழந்தைகள் மகிழ்ச்சி இல்லத்தடி, டயலொக் கோபுரம்- பனிக்குளம், மாங்குளம் குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர் குளம், எஸ்லப்பர் மருதங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

# சட்டமா அதிபர் திணைக்களம் முடிவை வெளிப்படுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

**11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தொடர வேண்டாம் என்ற சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவுக்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.**

சர்வதேச மன்னிப்பு சபையின் ஆசிய -பசுபிக் பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா சட்டமா அதிபர் திணைக்களத்தின் இந்த முடிவுக்கு பதிலளிக்கையில்,

பல தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போன நிலையில், உலகின் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான கட்டாய காணாமல் ஆக்கங்களில் இலங்கை உள்ளது.

இந்த வழக்கு, சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கான வாய்ப்பாக இருந்தது. குற்றவியல் பொறுப்பில் சந்தேகத்திற்குரியவர்கள், உதவி மற்றும் ஊக்குவிப்பு மற்றும் கட்டளைப் பொறுப்பின் கீழ் சம்பந்தப்பட்டவர்கள் உட்பட விசாரணைக்குக் கொண்டு வரப்படுவதை உறுதி செய்தது.

இந்த வழக்கு ஏற்கனவே இலங்கை நீதிமன்றங்களில் உள்ள தடைகளால் சூழப்பட்டுள்ளது. இந்த வழக்கு முடிவு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி சென்றடைவதை தடுக்கிறது.

சட்டமா அதிபர் திணைக்களம் அதன் முடிவிற்கான காரணங்களை விளக்க வேண்டும், மேலும் இலங்கை அதிகாரிகள் காணாமல் போன அனைத்துப் பாதிக்கப்பட்டவர் களுக்கும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (நி-5)

# இலங்கை-ரஷ்யாவுக்கு இடையில் கூட்டு சுற்றுலாத் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான கூட்டு சுற்றுலாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க ரஷ்ய சுற்றுலாப் பயணிகளிடையே இலங்கையை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமாக ஊக்குவிப்பதை முழுமையாக ஆதரிப்பதாக ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் ஆறு வருட இடைவெளிக்குப் பிறகு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மொஸ்கோவின் டொமோடெடோவோ விமான நிலையம் ஆகியவற்றுக்கு இடையேயான சேவையை மீண்டும் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நல்லூரான் அடியவர்க்கு ஒரு மருத்துவரின் அன்பு மடல்

நல்லூர் உற்சவம் வடபகுதி இந்துக்களுக்கு மட்டுமல்ல உலகு வாழ் ஈழத் தமிழருக்கு உயிரிலே கலந்த உணர்வு மிக்க விழாக்காலம்.

இம்முறையும் இவ்விழாக்காலம் மிகவும் இக்கட்டான ஒரு சூழ்நிலையில், கொரோனாவின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கும் நேரத்தில் மனித குலம் ஒரு வரலாற்று பெரும் இடரை சந்திக்கும் வேளையில் தொடங்குகின்றது. இறையன்பும், இறை வழிபாடும் இக்காலத்தின் மிக முக்கியமானது. மனநிம்மதிக்கும், உலக உய்வுக்கும் வேலவனின் ஆசியை வேண்டி நிற்கும் நேரமிது.

ஆனால் ஆலய வழிபாட்டின் போது மெய்ஞான ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் சில உயர் பண்புகளை பொதுமக்கள் கடைப்பிடிப்பார்கள். ஆனால் இந்த ஒரு மாத விழாக் காலம் குடா நாட்டு மக்களுக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் அளிக்கவல்லது.

இதற்காக ஒரு பொது வைத்திய நிபுணர் என்ற வகையில் ஓர் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

1."நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனோடி - கிளியே/ இரவு-பகல் காணேனொடி" என்றார் யோகர் சுவாமிகள்.

ஆலயத்தினுள் செல்லும் போது இறை நினைப்போடு மட்டுமே செல்லுங்கள். தேவையற்ற கவனச் சிதறல்களுக்கு இடமளியாதீர்கள்.

2. "சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில் தவ முறை தியானம் வைக்க... அறியாத" என்றார் அருணகிரிநாதர். முருகனை மெய்யன்போடு வழிபட அரை நிமிட நேரமே போதுமானது என்றார். எனவே ஆலயத்தினுள் அநாவசியமாக நேரத்தை செலவு செய்யாதீர்கள்.

3. மௌனம் மெய்யடியாரின் இன்றியமையாத பண்பு. தயவு செய்து ஆலயத்தினுள் பேசுவதை தவிருங்கள்.

4. "நெட்டி, நெடு மூச்சு, கொட்டாவி இவை மூன்றும் கெட்டார்க்கு உள்ள குணம்" என்பது முதுமொழி. ஆலயத்தினுள் முகக்கவசத்தை முறையாக வாய், மூக்கு ஆகியவற்றை மூடாமல் அணிவதையும் பெருமூச்சு, கொட்டாவி போன்றவற்றை விடுவதையும் தவிருங்கள்.


பேராசிரியர்.தி.குமணன்
(பொது வைத்திய நிபுணர்)

5. ஆலயத்தின் சுவர், மற்றும் இன்னோரன்ன பொருட்களை தீண்டுவதையும், பிறருடன் தொடுகையுறுவதையும் தவிர்த்து இரு கைகூப்பி இளையவன் முருகனின் அருளைப் பெறுங்கள்.

இந்த ஐந்து மிக எளிமையான பண்புகளைக் கைக்கொண்டு தேவர் சிறை மீட்ட செல்வன் திருவடிகள் காவல் என எண்ணி இந்த விழாக் காலத்தை ஆன்ம சுகத்திற்காகப் பயன்படுத்துவோமாக!

# இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள கைவிலங்குடன் வந்த ரஞ்சன்

(கொழும்பு)




நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நேற்று முன்தினம் தனது நெருங்கிய உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் உறவினரின் கோரிக்கைக்கு அமைய இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள நீதிமன்றம் விசேட அனுமதி வழங்கியதையடுத்து அவர் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்.

அதன்படி, ரஞ்சன் ராமநாயக்க அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் இறுதிச் சடங்குக்கு சிறைச்சாலை பேருந்தில் அழைத்து வரப்பட்டார். (நி-5)

# ராகம வைத்தியசாலைக்கு அமைச்சர் திடீர் விஜயம்



(கொழும்பு)

கொழும்பு புறநகர் பகுதியில் உள்ள ராகம போதனா வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சை விடுதிகள் தொற்று நோயாளர்கள் நிரம்பி, நோயாளர்க்ள் நடைபாதைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தது தொடர்பான காணொளிகள் நேற்று முன்தினம் சமூக ஊடகங்களில் மிக வேகமாகப் பரவிய நிலையில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி நேற்று முன்தினம் மாலை அந்த வைத்தியசாலைக்கு திடீர் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 94 பேர்...

இதன் அடிப்படையில் இலங்கையில் அதிக மரணம் இடம்பெற்ற நாளாக நேற்று முன்தினம் பதிவாகியுள்ளது.

இதுவரையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4,821 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## +2,669...

நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 321,429 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## இரு குழுக்களாக...

பம் வழங்குவது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், அரச நிறுவனாங்களின் பிரதானிகளினது தீர்மானத்துக்கமைய, வாரத்துக்கு ஒரு குழுவினர் என்ற அடிப்படையில் இரு குழுக்களாக பிரித்து ஊழியர்களைக் கடமைக்கு அழைப்பது தொடர்பான விடயமும் குறித்த சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## யாழில் மேலும்...

வயதுடைய ஆண் ஒருவரும் புங்குடுதீவைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 86 வயது முதியவர் ஒருவரும் கோவிட்டால் உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 135ஆக உயர்வடைந்துள்ளது. (ம-30,33)

## நாட்டை முடக்கு...

அல்லது மேலும் சிறிது நாட்களுக்கு தொடர்ந்து முடக்குவது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள கொரோனா கட்டுப்பாட்டு செயலணியின் கூட்டத்தின்போது தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றின் திரிபடைந்த டெல்டா தொற்று தீவிரமடைந்திருப்பதாக கொழும்பு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான சந்திம ஜீவந்தர தெரிவிக்கின்றார்.

டெல்டா தொற்றினை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதாக ஊடகங்களுக்கு நேற்றைய தினம் கருத்து வெளியிட்ட போது அவர் கூறியுள்ளார்.

இதுவரை கிடைத்தமாறுபட்ட கொரோனா தொற்றின் மாதிரிகள் தற்சமயம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில், எதிர்வரும் சனிக்கிழமை இறுதியறிக்கையை வெளியிட எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)

## கோவிட் தொற்...

கொரோனா தொற்றாளர்களால் நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் நிரம்பி வழிகின்றன.

குறிப்பாக களுபோவில வைத்தியசாலை, IDH வைத்தியசாலை, இரத்தினபுரி வைத்தியசாலை, கராப்பிட்டிய வைத்தியசாலை, றாகம வைத்தியசாலை என்பன தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன.

சில வைத்தியசாலைகளில் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதால் வைத்தியசாலைகளில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

களுபோவில வைத்தியசாலையில் கொரோனா தொற்றாளர்கள் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது. கோவிட் தொற்றுக்கு இலக்கானவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு நீண்ட வரிசை காணப்படுவதாகவும், சில மணித்தியாலங்களுக்குள்ளேயே இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வார்டில் ஒரு கட்டிலில் இரண்டு அல்லது மூன்று தீவிர நோயாளிகள் இருக்கிறார்கள். கட்டில்களுக்கு கீழ் சிலர் உயிருக்கு போராடும் நிலையில், ஒட்சிசனை பெற்றுக் கொள்கின்றார்கள். தரையில் நோயாளிகள் நடக்க பயப்படுகிறார்கள்.

மீதமுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் நீண்ட இருக்கைகளிலும், நாற்காலிகளிலும், மரங்களின் கீழும் மணல் தரையில் படுத்திருக்க வேண்டிய நிலை காணப்படுவதுடன், சிலர் போர்வைகூட இல்லாமல் படுத்திருப்பதை காண முடிகின்றது. (ம)

## தொற்றாளர்...

களால் நிரம்பி விட்டது. மேலதிகமாக கொரோனா தொற்றாளர்களை அனுமதிப்பதற்கு யாழ்.போதனாவில் இடமில்லை.

வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசன் கையிருப்பில் இல்லை.

யாழ்.போதனாவில் ஒட்சிசன் தட்டுப்பாடு நிலவும் அதேவேளை ICU கட்டில்களும் நிரம்பியுள்ளன.

யாழில் கொரோனா கட்டுக்கடங்காமல் பரவிவரும் நிலையில் யாழ்.போதனா அதனைக் கட்டுப்படுத்த திண்டாடி வருகின்றது. (ம)

## நாட்டு மக்களு...

மேலும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளர்களை விட 5 மடங்கு கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம் என இலங்கை வைத்தியர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், பயணக் கட்டுப்பாடுகளை முடிந்தவரை அமுல்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை வார்ட்களில் நோயாளர்கள் நிரம்பியுள்ளதாகவும், பொது மக்கள் சுகாதார விதி முறைகளைச் சரியாகப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை என்றும் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார். (ம)

## கொரோனா தீவிர...

தார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியிருக்கின்றார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு சுமார் 3 பேர் கோவிட் தொற்றால் இறக்கின்றனர் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் துணைத் தலைவர் வைத்தியர் மணில்கா சுமனதிலக நேற்று தெரிவித்தார்.

"இது கோவிட் வைரஸ் மற்றும் தடுப்பூசிக்கு இடையேயான போட்டி" என்று அவர் எச்சரித்தார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் போன்ற சிக்கலான நோய்கள் உள்ளவர்களுக்கு தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்பதால் தாமதமின்றி தடுப்பூசியைப் பெற வேண்டும் என்றார். (ம)

## ஒப்பு...

நெருக்கடி உருவாகி வருவதை அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

ஓரிரு வாரங்களில் கோவிட் -19 தொற்று நோயாளர் தொகை இருமடங்காகவோ அல்லது மும்மடங்காகவோ உயர வாய்ப்புள்ளது என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நெருக்கடியைச் சமாளிக்க தேவையான ஒக்ஸிஜன், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), பிசிஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைக் கருவிகள் உள்ளிட்டவற்றை துரிதமாக இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதை மக்கள் தவறாகப் பயன்படுத்தினர். இதனால் தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. அத்துடன், தொழிற்சங்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நோய் வேகமாகப் பரவ வழியேற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தினர். அதிக எண்ணிக்கையில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மூலம் அதிகளவானோர் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டதை நாங்கள் அவதானித்துள்ளோம்.

சுகாதார வழிகாட்டுதல்களைப் பொருட்படுத்தாமல் மக்கள் சில நேரங்களில் திருமணம் உள்ளிட்ட விழாக்களை ஏற்பாடு செய்தனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கோவிட்-19 தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் மோசமான பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். அதிகளவானோருக்கு ஒக்சிஜன் தேவைப்படுகிறது. இதனால் ஒக்ஸிஜன் தேவை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நிலைமையைச் சமாளிக்க தேவையான ஒக்ஸிஜன், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), பிசிஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைக் கருவிகள் உள்ளிட்டவற்றை துரிதமாக இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலை வாய்ப்பு

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனமானது இலங்கையின் ஆயுட் காப்புறுதிச் சேவைகளைக் கடந்த 32 வருடங்களாக வழங்குகின்ற முதன்மை நிறுவனமாகும். 86 இற்கும் மேற்பட்ட கிளைகளுடன். ஆண்டின் சிறந்த சேவை வழங்குனர் விருது. புதிய தொழில்நுட்பத்திற்கான விருது மற்றும் இலங்கையில் வேலை செய்வதற்கு சிறந்த நிறுவனத்திற்கான விருதுகளையும் பெற்ற நிறுவனமாகும். சர்வதேச தரத்தில் பல காப்புறுதி வசதிகளையும், சேவைகளையும் வழங்குவதுடன், யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கையில் உள்ள முதற்தர குழுமமாகிய "ஜோன் கீல்ஸ்" குழுமத்தின் ஓர் அங்கத்துவ நிறுவனமாகும்.

## நிதி ஆலோசகர்கள்



### தகைமைகள்

- க. பொ. த சாதாரண (O/L) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி (கணிதம் உட்பட).
- அர்ப்பணிப்பு மற்றும் குழுவாக இணைந்து செயற்படும் திறன்.
- வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப் பேணும் திறன்.

## முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்

### தகைமைகள்

- குறைந்தபட்சம் க. பொ. த உயர்தர (A/L) பரீட்சையில் சித்தி.
- காப்புறுதி, சந்தைப்படுத்தல் அல்லது ஏதேனும் தொழில் துறையில் 2 வருட அனுபவம்.
- அர்ப்பணிப்பு மற்றும் குழுவை வழிநடத்தும் திறன்.
- வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பை பேணும் திறன்.

### நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதனால் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள்

(7572)

- வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகள்.
- வருடாந்த இலவச வெளிநாட்டு சுற்றுலாக்கள்.
- சர்வதேச விருதுகள்.
- விரைவான பதவி உயர்வுகள்
- இலவச காப்புறுதி அனுகூலம்
- Tab, Laptop வசதிகள்
- கடன் வசதிகள் (மோ.சைக்கிள், கார் & வீடு)

சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

விண்ணப்ப முடிவுத் திகதி - 08.08.2021

rayman2017r@gmail.com
077 736 8879

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

GREAT PLACE TO WORK Best companies to work for 2013-2021 Sri Lanka


# ஆடி அமாவாசை பிதிர்க் கடன்களை கீரிமலை கடற்கரையில் செலுத்தத் தடை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை கடற்கரையில் ஆடி அமாவாசை பிதிர்க் கடன்களை இம்முறை செலுத்த முடியாது என தெல்லிப்பழை பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தால் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் -19 தொற்று நோய் காரணமாக கீரிமலை கடற்கரையில் ஆடி அமாவாசை பிதிர்க்கடன் நிறைவேற்றும் கிரியை இவ்வருடம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத் தருவதுடன் பக்தர்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு விரத அனுட்டானங்களை மேற்கொண்டு கோவிட் -19 பரவலை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுகொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2438)

0768226240 DHL

## காணி விற்பனைக்கு

பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(வெட்டுக் கிணறு)

(7579)

076 702 3565

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ( நிலப்பரப்பு ) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்தில் இருந்து 400 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தரகர் தேவையில்லை.

1 1/2 பரப்பின் விலை 10 இலட்சம்

(7575)

077 814 7389, 077 614 7333

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



பிறப்பு 10 - 04 - 1937

இறப்பு 04 - 08 - 2021

## காந்திமதி சின்னையா

கட்டுப்பிலா இமையாணன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காந்திமதி சின்னையா நேற்று முன்தினம் (04.08.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகாதேவன், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பமலர் (பிரான்ஸ்), நவநீதராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற அன்பரசு, காலஞ்சென்ற பேரின்பமலர், இன்பமலர், வேவிமலர், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மலிங்கம் (பிரான்ஸ்), உதயகுமாரி (பிரான்ஸ்), யமுனாராணி, தவராசா, காலஞ்சென்ற உதயசூரியர், சிவபதி, ராகினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வாசுகி (சுவிஸ்), அர்ச்சனா (பிரான்ஸ்), தயரூபன் (பிரான்ஸ்), சுவேதா (பிரான்ஸ்), சுவிதா (பிரான்ஸ்), தினேஷ் (பிரான்ஸ்), அருண், அருணா, தனுஷா, மோகனதாஸ், லதா, வினோத், ரூபிகா, வாகினி, ஜெசிபா, வர்ணவன், திவ்யா, பிரித்யா, ரக்சனா (பிரான்ஸ்), ரக்சன் (பிரான்ஸ்), ரதுசன் (பிரான்ஸ்), மிதுர்சி (பிரான்ஸ்), மிதுர்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் அவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2021) வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எல்லம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2467)

கட்டுப்பிலா, இமையாணன், உடுப்பிட்டி.

+33652372678

தகவல்:- வாசுகி (சுவிஸ்)
அர்ச்சனா (பிரான்ஸ்)
தயரூபன் (பிரான்ஸ்)

# மரண அறிவித்தல்



பிறப்பு 24 - 04 - 1954

இறப்பு 01 - 08 - 2021

## திருமதி சிவஞானமலர் அரியரட்ணம்

( இந்திரா )

சண்டிலிப்பாய் வடக்கு, மாசியப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானமலர் அரியரட்ணம் (இந்திரா) கடந்த 01.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தம் - கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரியரட்ணத்தின் அன்பு மனைவியும் றீகன், சுமதி, சுகந்தன், விஜி, பாமா, கோபு, றாஜீ ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமார், பாபு, கிருஷ்ணா, சசிகலா, அபிராமி, காலஞ்சென்றவர்களான சூர்யகலா, ஜெனதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிந்துஜன் (நோர்வே), டினா, தனுஜன், டினுஜன், கேனு, விஜய், சிந்து, சினேகா, தஞ்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்ஷயனின் அன்புப் பூட்டியுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், . உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7574)

சண்டிலிப்பாய் வடக்கு, மாசியப்பிட்டி.

077 918 0758

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.